# 'தமிழ் பண்டிதர்களுக்கு போதனாசிரியர் பதவிகள் வழங்கப்படும்'

Registered as a News paper in Ceylon விலை சதம் 15





பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.



# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 122
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 31 ரபி:அவ் 27 வெள்ளிக்கிழமை [13-6-69]



மோட்டார் வாகன-யந்திரங்களுக்கு
கெட்-புலொக்
மனிபோல்ட்,
பேசிங்!
HEADFACING
செய்து கொடுக்கப்படும்.
ராமகிருஸ்ணஸ்
ஸ்ரான்லி வீதி, :: :: யாழ்ப்பாணம்.
போன்: 7179.


## உப சபாநாயகருக்கு கல்வி அமைச்சர் தகவல்

பருத்தித்துறை, வியா. தமிழ்ப் பண்டிதர்களுக்குப் பட்டதாரிகளுக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் இவ்வரசாங்கத்தால் அளிக்கப்படும். அதிபர் பதவி, விசேட பதவிகள், பயிற்சிப் போதனாசிரியர் ஆகிய சகல பதவிகளுக்கும் தமிழ்ப் பண்டிதர்மார் விண்ணப்பிக்கலாம்.

யாழ்ப்பாணம் கீழைத்தேசப் படிப்புகள் சபையின் இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திய பண்டிதரும் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் தகுதி வாய்ந்தவர்களாகக் கணிக்கப் பட்டுள்ளனர்.

இவ்வாறு உபசபாநாயகர் திரு எம். சிவசிதம்பரம் எழுப்பிய சில கேள்விகளுக்குப் பதிலளிக்குமுகமாக கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல தாம் எழுதியுள்ள பதிலில குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இவ்விடயம் பற்றி மிக விரைவில் தாம் ஒரு விளக்கமான பதில் தர விருப்பதாகவும் அமைச்சர் தமது கடிதத்தில் கூறியுள்ளார்,

## நடன அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

குமாரி பவானி தாமோதரம் பிள்ளையின் மாணவி பவானி பாலசுப்பிரமணியத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் இம்மாதம் 21-ம் திகதி யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. பிரதம விருந்தினராக யாழ்நகர மேயர் திரு. எஸ். நாகராசா கலந்து கொள்வார்.

# சுன்னாகம் மயான கொலைபற்றி

# திடுக்கிடும் தகவல்

## சந்தேக நபர்கள் நேற்று கோர்ட்டில் ஆஜர்

யாழ்ப்பாணம், வெள்ளி

**சுன்னாகம் மயானத்தில் கிடந்த மண்டைதீவைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராஜாவின் சடலம் சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்ட நாகமணி தங்கராஜா விடமிருந்தும், தம்பன் கிட்டிணனிடமிருந்தும் பல திடுக்கிடும் தகவல்களைப் பொலிஸார் சேகரித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட இருவரும்நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில்ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.**


தங்கராஜா கல்மடுக் காட்டுக்குள்ளும், கிட்டிணன்கிளிநொச்சியிலும் வைத்துக் கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜேக்கப், சார்ஜன்ட்சந்தியாகுபிள்ளை, கான்ஸ்டபிள் சின்னத்தம்பி ஆகியோர் அடங்கிய பொலிஸ் கோஷ்டியொன்று மன்னார், வவனியா, மாங்குளம், கிளிநொச்சி ஆகிய காடுகளில் 3 நாட்களாகத் தேடுதல் நடத்திய பின்னரே நடைபெற்ற குண்டுவீச்சுச் சம்பவம் ஒன்றே இக்கொலைக்கு முக்கிய காரணமாக இருக்கலாம் எனவும் பொலிசார் கருதுகின்றனர்.

மரணம் நிகழ்ந்த இரவு மரணமானவரும் சந்தேக நபர்கள்இருவரும் சுன்னாகம் மயானத்தில் ஒன்ருகப் படுத்திருந்ததாகவும், அதிகாலை 2-30 மணியளவில் சந்தேகநபர்கள் இருவரும் கயிறு ஒன்ருல் மரணமானவரின் கழுத்தைத் திருகியதாகவும் 26-ம் திகதி காலையே அங்கிருந்து பஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதாம்.

சந்தேகநபர்கள் இருவரது வாக்குமூலங்களும இன்ஸ்பெக்டர் ஜேக்கப்பினுல் நேற்று பதிவுசெய்யப்பட்டன. கொலை நடந்து 16 நாட்களின் பின்னர் கைதுசெய்யப்பட்ட இருவரையும் பார்ப்பதற்கு திரளாக மக்கள் நேற்று சுன்னுகம் பொலிஸ்நிலையத்தில் திரண்டு நின்றனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர்



'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவுவிழா போட்டிகளில் வெற்றிபெறுவர்களுக்கு வழங்குவதற்காக மில்க்வைற் சோப் தயாரிப்பு ஸ்தாபனத்தார் வழங்கிய தங்கப்பதக்கம் ஒன்றை விழாக்கூட்டுக்காரியதரிசியான திரு. கே. சதாசிவத்திடம் மில்க்வைற்சோப் ஸ்தாபன உரிமையாளர்திரு. கே. கனகராசா கையளிக்கிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஈழநாடு' மர்ம மனிதர்?

### இவர் தான்!



# ரூபா 100 பரிசுபெறுங்கள்!

நாளைய ஈழநாட்டின் 5 பிரதிகளை வாங்குங்கள். ஒவ்வொன்றிலும் உங்கள் பெயரையும் முகவரியையும் எழுதுங்கள்.

அவற்றைச் சுருட்டிக் கையில் வைத்துக்கொள்ளுங்கள்.

மேலே உள்ள கண்களுக்குச் சொந்தக்காரரைக் கண்டதும், இப்பத்திரிகைச் சுருளினுல் அவரைத் தட்டி, 'ஹலோ, மிஸ்டர்' ஈழநாடு என்று சொல்லுங்கள்.

நீங்கள் அப்படி அழைத்தவர் 'ஈழநாடு' மர்ம மனிதனுயின் உங்கள் 5 பத்திரிகைகளையும் அவர் வாங்கிக்கொண்டு ஒரு பணம் பெறும் சீட்டைத் தருவார்.

14-6-69 இரவு திறந்தவெளியரங்கில் 8 மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு வைபவத்தில் உங்கள்

சார்ஜன்ட்சந்தியாகுபிள்ளை, கான்ஸ்டபிள் சின்னத்தம்பி ஆகியோர் அடங்கிய பொலிஸ் கோஷ்டியொன்று மன்னார், வவனியா, மாங்குளம், கிளிநொச்சி ஆகிய காடுகளில் 3 நாட்களாகத் தேடுதல் நடத்திய பின்னரே சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

நாகமணி தங்கராஜா என்பவர் ஊரெழுவில் வசித்து வந்ததாகவும், திருமணமாகி இப்போது மனைவியைப் பிரிந்து வாழ்வதாகவும், இரண்டாவது சந்தேக நபரான தம்பன் கிட்டிணன் 28 வயது) ஏற்கனவே பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஊரெழுவைச்சேர்ந்த 70 வயது மாதுவின் மகன் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 26-ம் திகதி சுன்னுகம் மயானத்தில் இச் சடலம் கருகிய நிலையில் உருத்தெரியாமல் சிதைந்து கிடந்தது. ஆனால் விரல் அடையாள நிபுணர்களின் அறிக்கையின்படி மரணமானவர் ஸ்ரீஸ்கந்தராஜா என்றும் ஏற்கனவே சைக்கிள் களவு ஒன்றில் அகப்பட்டவர் என்றும் தெரியவந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள கடை ஒன்றில் சுமார் ஒரு மாத காலத்துக்குமுன்னர் மயானத்தில் ஒன்றுகப் படுத்திருந்ததாகவும், அதிகாலை 2-30 மணியளவில் சந்தேகநபர்கள் இருவரும் கயிறு ஒன்றுல் மரணமானவரின் கழுத்தைத் திருகியதாகவும்' 26-ம் திகதி காலையே அங்கிருந்து பஸ்ஸில் கிளிநொச்சி சென்றுவிட்டதாகவும் பொலிஸ் கைதுசெய்யப்பட்ட இருவரையும் பார்ப்பதற்கு திரளாக மக்கள் நேற்று சுன்னுகம் பொலிஸ்நிலையத்தில் திரண்டு நின்றனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபின்னர் றிமாண்டில் வைக்கப்பட்டனர். (கா. நி)

## 'சைவமும் தமிழும் அழியவிடது காப்பாற்றப்பட வேண்டும்'

### வட்டுக்கோட்டை எம். பி. கூறுகிருர்

அராலி, வியாழன்

''உலகின் வழக்கிலுள்ள சிறந்தமொழிகளில தமிழும் ஒன்றென சர்வதேசங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படும் இந்நாட்களில் தமிழை தாய் மொழியாகவுள்ள இந் நாட்டு சிறுவர்களை, தமிழைக்கற்கவிடாதும், சைவத்தை பௌத்தமாக மாற்றியும் செயற்படுத்த திட்டங்கள் இப்போ திட்டப்பட்டு வருகிறது. தமிழும் சைவமும் அழிந்தொழியாது காப்பாற்றவேண்டியது எமது கடமை.''

இவ்வாறு அராலிதெற்கு சரஸ்வதி தெற்கு சரஸ்வதி மகாவித்தியாலயபுதிய கட்டிடத்திறப்பு விழாவின் பின்னர் தொடர்ந்து அவ்வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து தலைமைதாங்கி உரையாற்றிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் கூறிஞர். அவர் மேலும் பேசுகையில், 'தமிழர்கள் நிலைமை இப்போது இக்கட்டான நிலையிலுள்ளது. சாதிவித்தியாசத்தைப் பயன்படுத்திநம்மையும்நமது சந்ததியினரின் மொழி, சமய கலாச்சாரத்தையும் அழித்துவிட சிலர் தீவிரமாக முனைந்துள்ளார்கள் என்ருர்.

திரு. அமிர்தலிங்கம் பாடசாலை பற்றிப் குறிப்பிடும் போது, தமது தொகுதியி

(4- பக்கம் பார்க்க)

கையளிக்கிருர்.



'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவுவிழா போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்குவதற்காக யாழ்ப்பாணம் ஏ. கே. எஸ். ஜுவல்லேர்ஸ் ஸ்தாபனத்தார் அளித்த தங்கமெடல் ஒன்றை விழாக் கூட்டுக் காரியதரிசி திரு. ச அம்பிகைபாகன் ஏ. கே. எஸ். ஸ்தாபன ஸ்ரீபங்காளர் ஜனுப் எஸ். எல் எம். தீபியிடமிருந்துபெற்றுக்கொள்கிருர்.

நீங்கள் அப்படி அழைத்தவர் 'ஈழநாடு' மர்ம மனிதனுயின் உங்கள் 5 பத்திரிகைகளையும் அவர் வாங்கிக்கொண்டு ஒரு பணம் பெறும் சீட்டைத் தருவார்.

14-6-69 இரவு திறந்தவெளியரங்கில் 8 மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு வைபவத்தில் உங்கள் பெயர் படிக்கப்படும். பணம்பெறும் சீட்டைக் கொடுத்து ரூபா 100 பரிசுபெறுங்கள்.

**ரூபா 100 சம்பாதிக்கும் வழி இதுதான்!**

'ஈழநாடு' மர்ம மனிதன் நாளை முற்பகல் நடைபெறும் வர்த்தக அலங்கார ஊர்வலத்தில் கலந்து கொள்வார். நாளை பகல் அவரை நீங்கள், எந்த வீதியிலும், எந்தப் பொது இடத்திலும் வைத்து அடையாளம் காட்டலாம்.

**தயவுசெய்து வீடுகள் கடைகளுக்குள்ளோ இருக்கிற யாரையாவது தேடாதீர்கள். அவர் அங்கே இருக்கமாட்டார்.**


## வருக! வருக!

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவையொட்டி இன்று யாழ். நகரில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளுக்கும் நாளைக்காலை 'ஈழநாடு' காரியாலய வாயிலிலிருந்து ஆரம்பமாகும் வர்த்தக அலங்காரப் பவனியிலும் மாலையில் யாழ்ப்பாணம் திறந்த வெளிஅரங்கில் நடைபெறும் கலைவிழா, பரிசளிப்பு விழாக்களிலும் இரவு நடைபெறும் வாண விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு பொதுமக்களை அன்புடன் அழைக்கின்ருேம்.

இங்ஙனம்
'ஈழநாடு' 10-வது ஆண்டு
யாழ்ப்பாணம். பொதுமக்கள் விழாச்சபையினர்


# வேலை வாய்ப்பளிக்க அரசாங்கம் நடவடிக்கை

கோட்டை, வியாழன்

**தனிப்பட்ட ஸ்தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர் பட்டியலையும் மற்றும் விபரங்களையும் இம்மாதம் 20-ந் திகதிக்குமுன்னர் தொழில் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்குமாறு தனிப்பட்ட ஸ்தாபனங்களை அரசாங்கம் கோரியுள்ளது**

வேலையற்ற படித்த வாலிபர்களுக்கு வேலை வசதிகள் அளிப்பதற்காகவே அரசாங்கம் இவ்வித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தொழில் கமிஷனர் இதுசம்பந்தமாக இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஒத்துழைப்புடன் வேலைவாய்ப்புகள்பற்றி ஆராய்ந்துவருகிருர்.

இதுபற்றிய முழு விபரங்கள் சேகரிக்கப்பட்டதும் வேலையற்ற படித்த வாலிபர்களுக்கு வேலைவழங்குவதற்கான திட்டம் செயல் படுத்தப்படுமென சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை ஓரளவு நீக்கலாமென அரசாங்கம் கருதுகிறது.

## நாவலர் சிலைப்பீடத்திற்கு ஸ்ரீகாந்தா அடிக்கல்நாட்டினுர்

யாழ்ப்பாணம், வியா

நாவலர் சிலை வைக்கும் பீடத்திற்கு திரு ஸ்ரீகாந்தா நேற்று நண்பகல் அத்திவாரக்கல் நாட்டினுர்.

நாவலர் சிலை நிறுவுவதற்கான காணி நேற்று முன்தினம் அரசாங்கத்தால் கையளிக்கப்பட்டது.

---

யாழ்ப்பாணம், வியாழன்

வலிகாமம், வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வெள்ளி விழா இம்மாதம் 14ம் தேதி பண்டிதர் க. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும் பிரதம விருந்தினராக காங்கேசன்துறை எம் பி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கலந்துகொள்வார்.

## வரட்சி

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவில் நிலவிவரும் கடும் வரட்சி. காரணமாக குளம் குட்டைகள் யாவும் வற்றி விட்டன. இதனுல் கால் நடைகள் பெரும் கஷ்டமடைகின்றன. மேலும் கிணறுகள் யாவும் வற்றிக் கொண்டே போகின்றன. சிலதினங்களில் கிணறுகளில் நீர்வற்றிவிடும் என மக்கள் பயப்படுகிருர்கள்.

### 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழா

# கோட்டை வெளியில் வாண விளையாட்டுக்கள்; நாளை காலை அலங்கார வண்டிகள் பவனி!

## 'ஈழநாடு' விழாவை மாணவர்கள் ஆரம்பித்துவைத்தனர்

— நமது காரியாலய நிருபர் ''திரு'' —

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதியைச் சேர்ந்த 39 கல்லூரியைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்ட உடற்பயிற்சிப் போட்டியுடன் 'ஈழநாடு' பத்திரிகையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா நேற்றுக் காலை 8- 30 மணிக்குக் கோலாகலமாக ஆரம்பமானது.

இன்றும் நாளையும் மத்திய கல்லூரி மைதானம், ஸ்ரேடியம் மைதானம், யாழ். திறந்த வெளியரங்கு, கோட்டை மைதானம் ஆசிய இடங்களில் இரண்டு நாள் விழாவும் நடைபெறும்.

நாளைய விழாவின் விசேஷ நிகழ்ச்சியாக இரவு 10- 30 மணி முதல் யாழ். கோட்டை வெளியில் வாண விளையாட்டுக்கள் இடம் பெறும்.

புரு மார்க் வெடி, வாணத் தயாரிப்பாளர்களான பொன்னையா மணியம் பல்வேறு விதமான கலர்களில் அமைந்த வாணங்களையும், அவிட்டுகளையும் ரசிகப் பெருமக்களுக்காக இங்கு காண்பிக்க விருக்கின்ருர்.

வட இலங்கையில் முதல் ஸ்தானம் வகிக்கும் இவர்கள் 1967-ம் ஆண்டு சாவகச்சேரியில் பொலிஸ் இலாகாவினுல் நடாத்தப்பட்ட வாண வேடிக்கைப் போட்டியில் முதலிடம் பெற்றவர்கள். 1967-ம் 68-ம் ஆண்டுகளில் யாழ். முற்றவெளியில் நடைபெற்ற போட்டிகளிலும் கலந்து உயரிய பரிசில்களைப் பெற்றவர்கள். 1969-ம் ஆண்டு கேகாலையில் நடைபெற்ற வாண வேடிக்கையில் கலந்து முதற்பரிசுக்கான தங்கப்பதக்கத்தைப் பெற்றவர். தில்லை நடராஜரின் திரு நடனத்தையும் நாளை இரவு வான வெளியில் விடவிருக்கிருர்.

வாண விளையாட்டில் இரண்டாவதாகக் கலந்து கொள்பவர் யாழ்ப்பாணம் கொன்வன்ட் ரேட்டைச் சேர்ந்த என். பொன்னு 1938 ம் ஆண்டு அரசினர் உத்தரவு பெற்ற வாண வெடி உற்பத்தியாளராஞர்.

உலக யுத்த சமாதான விழா முதலாகப் பல விழாக்களில் பங்கு பற்றி அவ்வப்போது பல தங்கப்பதக்கங்களையும் நற்சாட்சிப் பத்திரங்களையும் பரிசாகப்பெற்றவர்.

1959-ம் ஆண்டு சென். பற்றிக்ஸ் கல்லூரியினர் நடத்திய 'காணிவலில் இரண்டு தங்கப்பதக்கங்களைப் பரிசாகப் பெற்றவராவர்.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த இ. வைரமுத்து, மானிப்பாய் எஸ். அழகரத்தினம், பன்னுலை எஸ். இரத்தினசாமி ஐயர், சுன்னுகம் எஸ். தாமோதரம்பிள்ளை ஆகியோரும் இவ்வாணவிளையாட்டில் கலந்து கொள்கிருர்கள்.

நாளை காலை ஈழநாடு காரி

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

குத்தகைக்கு / விலைக்கு 6 பரப்புக் காணி சுன்னுகம் பட்டண எல்லைக்குள் காங்கேசன்துறை யாழ்ப்பாணம் ரோட்டில் உடனடியாக தேவை. சோமசுந்தரம், 50, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம். 1025

### விற்பனைக்கு

கார்:

E Y 2000 தொடர்பிலக்க A 40 கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அ. தருமலிங்கம், உடும்பிராய் வடக்கு, உடும்பிராய். 1027

பிலிப்ஸ் வானொலிப்பெட்டி:

5 வால்வு, 3 அலைவரிசைகள் கொண்ட வானொலிப் பெட்டி விற்பனைக்குண்டு. நல்ல நிலைமையிலுள்ளது. நேரில் பார்வையிடவும். K. C. இராமநாதன், 21, யாழ்வீதி, யாழ்ப்பாணம். 1029

நாய்க்குட்டிகள்!

உயர்ந்த இன அல்சேசன் நாய்க்குட்டிகள் 4 (நான்கு) 40 (நாற்பது) நாட்கள் கொண்டவை. உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். திருமதி தங்கருணி அரியரத்தினம், சுதுமலை கிழக்கு, சுதுமலை 1030

யாழ்ப்பாணம் வண்ணுர் பண்ணை சிவன் கோவிலுக்கண்மையில் காங்கேசன்துறை வீதி 330-ம் இலக்க ஒன்றரைப் பரப்புக் காணியில் அமைந்துள்ள நவீன வசதிகளையுடைய மாடிக் கட்டிடம் விற்பனைக்குண்டு. குடியிருப்பதற்கோ காரியாலயத்திற்கோ, பண்டகசாலைக்கோ, அச்சகத்துக்கோ வேறு எதுவித வர்த்தக நிறுவனத்துக்கோ மிகப் பொருத்தமானது. விபரங்கட்கு காரியதரிசி, அந்தியகால சகாயநிதிச் சங்கம் லிமிட்டெட், 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் 1183

### தேவை

யோகபுரம்மேற்கு ப. நோ. கூ. சங்கத்திற்கு ஓர் நுகர்ச்சிப்பொருட்பகுதி விற்பனைப் பொறுப்பாளர் தேவை

தகைமைகள்:-

1. வயது:- 20 3 ,
2. கல்வி:- கனிஷ்ட தராதரம்.
3. பிணை;- ரொக்கம் 500/- ஆதனம் ரூபா 1000 -
4. இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.
5. வேதனம்:- $\frac{100}{5X10}$

குறிப்பு:- கூட்டுறவுப் பயிற்சியுடையவர்களதும், உள்ளூர் வாசிகளதும் விண்ணப்பங்கட்கு விசேட சலுகை அளிக்கப்படும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் "தலைவர், யோகபுரம் மேற்கு ப. நோ. கூ. சங்கம், துணுக்காய்" என்னும்முகவரிக்கு 5-7-69ந் திகதிக்கு முன் அனுப்பப்படவேண்டும்.

இங்ஙனம்
கு. சிவஞானமூர்த்தி,
கௌரவ காரியதரிசி.

1604

## கொடியேற்றம்

சித்தங்கேணி, வெள்ளி

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் ஆனி உத்தர உற்சவங்கள், கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பமாகிறது. தொடர்ந்து ஒன்பது தினங்களுக்குப் பகல் அபிஷேகமும், பிற்பகல் விசேஷ பூசைகளும் நடைபெற்று சுவாமி வீதி வலம் வரும் காட்சியும் நடைபெறும். 22-ம் திகதி தேர்த்திருவிழாவும், 23-ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.


**MANOHARA**
**JAFFNA**
தினசரி 6-30, 10-00
பிரீபோயா, போயா 2-30
ருக்மணி, டொமி,
அசோகாபொன்னம்பெருமாள்
நடித்த
சமியா பிறிந்தகே
பெவியாய
(Sinhalese)

**வெஸ்லி சினிமா**
(மானிப்பாய்)
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
அசோகன் — மணிமாலா
நடித்த
வல்லவனுக்கு
வல்லவன்
(புதிய கொப்பி)

**ராஜா** 151வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

**ராணி**
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த


ஈழநாடு 10-வது ஆண்டு விழா

# மின்னொளி கூடைப் பந்தாட்டம்: இன்று இறுதிமோதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

'ஈழநாடு'10-வது ஆண்டு விழாவையொட்டி மின்னொளியில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிமோதல் இன்று நடைபெறும். பிரதம விருந்தினராக விளையாட்டமைச்சின் உதவி டைரக்டர் டாக்டர் ஜே. ஸி. துரைசிங்கம் கலந்து கொள்கிறார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற, கூடைப்பந்தாட்டங்கள் யாவும் மிக போட்டியாகவும் ரசிப்பாகவும் காணப்பட்டது. சென். பற்றிக்ஸ் கல்லூரியுடன் போட்டியிட்ட கடற்படைக் கோஷ்டியும், ஓல்கோல்ஸ்டாஸ் போட்டியிட்ட கோப்பாய் கோஷ்டியும் மிகக் கடுமையாகப் போட்டியிட்ட பின்னரே தோல்வியடைந்தன.

இப்போட்டிகள் பற்றிய முழுவிபரங்களும் வருமாறு:

### ரெக்னிக்கல் கோஷ்டி வெற்றி

யூனியர் ரெக்னிக்கல் கோஷ்டிக்கும், யாழ்.மத்திய கல்லூரிக் கோஷ்டிக்குமிடையில், நடைபெற்ற போட்டியில் ரெக்னிக்கல் கோஷ்டி வெற்றி பெற்றது. இப்போட்டியின் ஆரம்பத்தில் யூனியர்ரெக்னிக்கல்கோஷ்டி புள்ளிகளைமிக வேகமாக சேகரிக்கத் தொடங்கிய போதிலும், மத்திய கல்லூரிக் கோஷ்டியினரும், அவர்களைத் தொடர்ந்து புள்ளிகளைச் சேகரித்தவண்ணமே இருந்தனர். மத்திய கல்லூரிக் கோஷ்டியினர் பலமுறை கூடையை நோக்கி வீசிய பந்தை, யூனியர் ரெக்னிகல் கோஷ்டியினர் மிகசாதுரியமாகத் தடுத்ததினுல், மத்திய கல்லூரி கோஷ்டியினரை 34-18 புள்ளிகள் வித்தியாசத்தால் ஆட்ட முடிவில் வெற்றி பெற்றனர். யூனியர் ரெக்னிகல் கோஷ்டியில் புள்ளிகள் பெற்ருேர் விபரம் வருமாறு: பாஸ்கரநாதன்-18, அலோசியஸ் 12, சின்னத்துரை-2, மகரூப்-2.

யாழ். மத்திய கல்லூரியில் புள்ளி பெற்ருேர் விபரம் வருமாறு: பஞ்சலிங்கம் -6, ஜெயக்குமார்-6, தயாசிங்கம்-4, நந்தகுமார்-2. இப் போட்டிக்கு திருவாளர்கள்: அருங்குணநாயகமும், ஐந்துருக்குலசிங்கமும் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்கள்.

### சென். பற்றிக்ஸ்

மான போட்டியில். சென். பற்றிக்ஸ் வெற்றிபெற்றது, சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர் எதிர்க் கோஷ்டியை மிக சாதுரியமாகஏமாற்றி புள்ளிகளைப்பெற்றபோதும், கடற்படைக் கோஷ்டியினரும் அடிக்கடி புள்ளிகளைப்பெற்ற வண்ணமே இருந்தனர் கடற்படைக் கோஷ்டி வீரர் கபீரியல் பிள்ளையின் விளையாட்டு பார்ப்பதற்கு மிகக்கவர்ச்சியாக இருந்தது. சென். பற்றிக்ஸ் கோஷ்டியில் சத்தியானந்தாவும் பொன்ருயும் கூடையினுள் பந்தை போடுவதில் பல புதிய தந்திரங்களைக் கையாண்டதால், பலமுறை ரசிகர்களின் பலத்த கரகோஷத்தைப் பெற்றன. ஆட்ட முடிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி கடற்படை கோஷ்டியை 31 22 புள்ளிகள்வித்தியாசத்தால்வெற்றி பெற்றது. சென். பற்றிக்ஸ் கோஷ்டியில் புள்ளிகள் பெற்ருேர் விபரம்; சத்தியானந்தா-16, பற்றிக்ஸ்-8, பிறவுன்ஸ்-1, பொன்ருயா-2, விஜயரட்ணம்-1. கடற்படைக் கோஷ்டியில் புள்ளிகள் பெற்ருேர் விபரம்: கபீரியல்பிள்ளை-9, அலெக்ஸ்-5, செல்வராசா-4, ஆனந்தராஜா-2, ஜயவீரா-2. இப் போட்டிக்கு திருவாளர்கள் சதாசிவமும், நாகரட்ணமும் மத்தியஸ்தர்களாகக்கடமையாற்றினுர்கள்.

### மெமோறியல் வெற்றி

மெமோறியல் விளையாட்டுக் கழகத்துக்கும், பொலிஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில்மெமோறியல் கோஷ்டியினர் மிக இலகுவாக வெற்றி பெற்றனர். மெமோறியல் கோஷ்டியில் வீரர் அருங்குணநாயகம் எதிரிகளை ஏமாற்றி புள்ளிகள் சேகரிப்பதில் வல்லவராய் திகழ்ந்தார். மெமோறியல் கோஷ்டி ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை மிக வேகமாக விளையாடி 35-10 புள்ளிகள் வித்தியாசத்தால் பொலிஸ் கோஷ்டியை வெற்றி பெற்றது. மெமோறியல் கழகத்தில் புள்ளிகள் பெற்ருேர். விபரம் அருங்குணநாயகம்-15, தனபாலசிங்கம்-12, கணேஷ்குமார்-4, பத்மநாதன்-4. பொலிஸ் கோஷ்டியில் புள்ளிகள் பெற்ருேர் விபரம் ஜயசிங்கி-4, பெரேரா-2, கஸீம்-2. மேவின் பெர்ணுண்டோ-2, திருவாளர்கள் சதாசிவமும், நவராஜாவும் மத்தியஸ்தம் வகித்தனர்.

### கோப்பாய் கழகம் வெற்றி

'ஓல்ட்கோல்ட்ஸ்' விளையாட்டுக் கழகத்துக்கும், கோப்பாய் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற மிகக் கடுமையான போட்டியில் ஈற்றில் ஓல்ட் கோல்ஸ் வெற்றிபெற்றது. இப்போட்டியின் ஆரம்பத்தில் கோப்பாய் கோஷ்டியினரே கூடுதலான புள்ளிகளைப் பெற்றனர். இக் கோஷ்டியின் வீரர் நவராஜா மிக தூரத்தில் நின்று கூடையினுள் பந்தை வீசுவதில் வல்லவராய் திகழ்ந்தார். ஓல்ட்கோல்ட்ஸ் கோஷ்டியினர் ஆட்டத்தின் கடைசிப்பகுதியில் சிறப்பாய் விளையாடி 25 21 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றனர். இக் கோஷ்டியில் புள்ளிகள் பெற்ருேர் விபரம்: செல்வராஜன் 9, கொட்பெறெட் 6, சண்குகா 4, மில்ஸ் 2, சந்திரஜயன் 2, ரஞ்சன் 2.

கோப்பாய் கோஷ்டியில் புள்ளிகள் பெற்ருேர் விபரம்: நவராஜா 7, ருத்திரகுமார் 6, சுகுணசபேசன் 4, தேவராயேந்திரன் 2, செல்வராசா 2. இப்போட்டிக்கு திருவாளர்கள் பாலசிங்கமும் கபீரியல்பிள்ளையும் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்கள்.

(தே. நி)

## கரபந்தாட்டபோட்டிமுடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஈழநாடு 10-வது ஆண்டு விழாவையொட்டி நடைபெறும் கரபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்றபோட்டிகளில் பலம்கொண்டகோஷ்டிகள் பல எதிர்பாராத விதமாக தோல்வியடைந்தன.

### வல்வை யுனைட்டட் வெற்றி

வல்வெட்டித்துறையுனைட்டட் விளையாட்டுக் கழகத்துக்கும் ஊர்காவற்றுறை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் வல்வெட்டித்துறை யுனைட்டட் 15-7 , 15-11 புள்ளிகள்வித்தியாசத்தால் அடுத்தடுத்து வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. ஜெயராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### கே, கே. எஸ். வெற்றி

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான போட்டியில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 15-9,15-11 புள்ளிகள் வித்தியாசத்தால் அடுத்தடுத்து வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு கே. கந்தவனம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### யாழ்கோஷ்டி வெற்றி

### சாரண ஆசிரியர் கூடினர்

சாய்ந்தமருது, புதன்


கல்முனை வட்டார சாரண ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று அண்மையில் அல்ஹிலால் வித்தியாலய மண்டபத்தில் அக்கரைப்பற்று மாவட்டச் சாரணஆணையாளர் திரு. ஏ. வி. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

நிந்தாவூர், சம்மாந்துறை வட்டாரக் கல்லியதிகாரி ஜனுப் எஸ். எம். அலியார், கல்முனை வட்டாரக் கல்வியதிகாரி ஜனுப் எம். எஸ்.

இன்றைய பலன்
13-6-69
வைகாசி மாதம்

## வீதியமைக்கும் வேலை ஆரம்பமாகிறது

மக்கள் போக்குவரத்துக்கு எவ்வித வசதியுமற்ற வயல் பகுதியான கந்தரோடை மடத்தடியில் பிரதான வீதியொன்றும் மற்றும் கிளை வீதிகளும் சிரமதான மூலம் அமைப்பதற்கு அப்பகுதி மக்கள் முன்வந்துள்ளனர் உடுவில் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் (நடு) சுன்னுகம் பட்டின சபைத் தலைவர் திரு. பொ நாகலிங்கம் (இடது), அவ்வட்டார அங்கத்தவர் திரு. மா. நடராசா (வலது) ஆகியோர் மண்ணை வெட்டி சிரமதான வேலையை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்



### கல்லூரி இல்ல விளையாட்டுபோட்டி

கோப்பாய், வியாழன்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இம்மாதம் 22-ம் திகதி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. வலி-கிழக்கு காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து போட்டிகளில் வெற்றிபெற்ருேருக்கு பரிசில்களை வழங்குவார்.

எம். பவீல் மவுலானு ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

### கல்முனை வென்றது

சாய்ந்தமருது, செவ்.

சம்மாந்துறை டைனமைற் விளையாட்டுக்கழகம் கிழக்கிலங்கை ரீதியில் கழகங்களுக்குமிடையே நடாத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கல்முனை யுனைட்டெட் விளையாட்டுக் கழகமும், செங்கலடி தபாலக விளையாட்டுக் கழகமும் மோதின.

இந்த கரப்பந்தாட்டப் போட்டியில் கல்முனை யுனைட்டெட் விளையாட்டுக் கழகம் செங்கலடி தபாலக விளையாட்டுக் கழகத்தை வெற்றியீட்டியது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்த
வல்லவனுக்கு
வல்லவன்
(புதிய கொப்பி)

நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
**உயிரா மானமா**

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜிகணேசன் ★ பத்மினி
★ கே. ஆர். விஜயா ★ நாகேஷ்
நடித்த
**திருமால் பெருமை**

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 3 காட்சிகள், பிரீபோயாபோயா, 4 காட்சிகள்.
நாகேஷ்—சுந்தரராஜன்



வசந்தா
மனோரமா
கருணாநிதி
சோ
நடித்த
**ஆலயம்**

மகத்தான 2-வது வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு)
வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
விஜயா (மட்டுநகர்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படுகின்றது
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
குமாரி சச்சு, சுந்தரராஜன்
நடித்த
**பொம்மலாட்டம்**
திரைக்கதை வசனம்
சோ.
இசையமைப்பு
வி. குமார்


ரம் வருமாறு: பஞ்சலிங்கம் -6, ஜெயக்குமார்-6, தயாசிங்கம்-4, நந்தகுமார்-2. இப் போட்டிக்கு திருவாளர்கள்: அருங்குணநாயகமும், ஐந்துருக்குலசிங்கமும் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்கள்.

## சென். பற்றிக்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், கடற்படைக் காவ்டிக்குமிடையில் நடைபெற்ற உற்சாக

## இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 13—6—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-30 துதிப்பாடல்கள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாணவர் மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடிவிளையாடு பாப்பா 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின்இசை, 7-35 வானொலி குறுக்கெழுத்துப்போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.


வல்வெட்டித்துறை
**ரஞ்சனா தியேட்டர்**
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
**தங்கை**

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, Pre Poya 4 Shows
Walt Disney's
**Born to Sing**


புள்ளிகள் ... வல்லவராய் திகழ்ந்தார்.

## இன்றைய பலன்

13-6-69
வைகாசி மாதம்

31-ம் திகதி

வெள்ளிக்கிழமை

திதி- சதுர்தசி இரவு 3-08 மேல் அமாவாசை.

நட்சத்திரம்- கார்த்திகை பகல் 1-08 மேல் ரோகிணி.

ராகுகாலம்- 10-23 — 11-53.

சுபநேரம்- 5-53 — 7-23.

---

இன்று பிறந்தவர்களுக்கு— முற்பகுதியில் முன்னேற்றமான பலன்களைக் குறிப்பிடினும் பிற்பகுதி சாதாரணமாகவே இருக்கும். அவசர நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளவும். மின்னியல்துறையில் ஈடுபடுபவர்கள் பாதுகாப்பாக நடந்து கொள்ளவும். வேண்டாத நபர் ஒருவரின் உறவு வேதனையைத் தரும்.

---

மேஷம்- கவலையின் தாக்குதல், கடன்பட நேரிடும்.

ரிஷபம்- தொடர்ந்து வரும் பகை, துன்பத்தில் சாயல்.

மிதுனம்- வெள்ளிப் பணம் துள்ளும், வேண்டியது கிடைக்கும்.

கடகம்- இரும்பு மனம், இருண்ட வாழ்வு.

சிம்மம்- தாய்வழிச் சுகம், தனத்துடன் வாழ்வு.

கன்னி- மக்கள் ஆதரவு, மனதில் உற்சாகம்.

துலாம்- பகைமூட்டம், பதட்டத்தைத் தவிர்.

விருச்சிகம்- வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம்.

தனுசு- கடன்பட நேரிடும், சூழ்ச்சிமிகுதி

மகரம்- தெளிந்தமனம், பாக்கியவிருத்தி.

கும்பம்- செய்தொழில் சிறப்பு, தெய்வத்தின் துணை.

மீனம்- பொருள்வரவு, கொண்டாட்டம்.

— சோதிடக்கலாநிதி —

**திருமலை வேலுப்பிள்ளை**

நடைபெற்ற ரசிப்பான போட்டியில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 15-9, 15-11 புள்ளிகள் வித்தியாசத்தால் அடுத்தடுத்து வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு கே. கந்தவனம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## யாழ்கோஷ்டி வெற்றி

யாழ் கரபந்தாட்டக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் ஆட்டம் தொடங்கி முடிவடையும்வரை யாழ் கோஷ்டியினர் பலம் கொண்ட அடிகளை கையாண்டதால் கிறீன் பீல்ட் கோஷ்டியினர் நிலைகுலைந்து விளையாடி அடுத்தடுத்து இரு ஆட்டங்களிலும் 15-12, 15-3 புள்ளிகள் வித்தியாசத்தால் தோல்வி அடைந்தனர். இப்போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சென். பீற்றஸ் வெற்றி

சென். பீற்றஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், நீர்வேலி விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் ஆட்டம் நீண்டநேரம் நடைபெற்ற போதும், ரசிப்பாகக் காணப்படவில்லை. முதல் ஆட்டத்தில் நீர்வேலிக் கோஷ்டி 15-5 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது. பின் நடைபெற்ற இரு ஆட்டங்களிலும் சென். பீற்றஸ் கோஷ்டி 15-9, 15-11 புள்ளிகளால் வெற்றி பெற்றது இப்போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## யாழ். கோஷ்டி வெற்றி

யாழ். கரபந்தாட்டக் கழகத்துக்கும், இராணுவக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற 'செற்றப்' போட்டி ரசிப்பாகக் காணப்பட்டது. யாழ். கோஷ்டியில் வீரர் சீவரட்ணம் பல 'அதிர் வெடிகளை' அடுத்தடுத்து அடித்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்ருர். ஆட்ட முடிவில் யாழ். கோஷ்டி 15-11, 15-14 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (தே. நி.)

## ஸாகிரா சம்பியனானது

சாய்ந்தமருது, புதன்

கல்முனைமாவட்ட மத்திய மகா வித்தியாலயங்களுக்கிடையிலான சுவட்டு மைதான மெய் வல்லுனர் போட்டியில் கல்முனை ஸாகிராக் கல்லூரி இவ்வருட சாம்பியன் பட்டத்தை தட்டிக்கொண்டது.




**... சொக்கலெட்**
**போட்டியில்**
முடிவு திகதி
31-8-69

முதற் பரிசு — ரூபா. 1500.00
இரண்டாம் பரிசு — ரூபா. 1000.00
மூன்ரும் பரிசு — ரூபா. 500.00
50 ஆறுதல் பரிசுகள் - ஒவ்வொன்றும் ரூபா. 50.00
100 நல்லெண்ணப் பரிசுகள் - ஒவ்வொன்றும் ரூபா. 25.00

**நீங்கள் செய்யவேண்டியது**

பல்வேறு கெண்டோஸ் சொக்கலெட் மேலுறைகளின் பகுதிகள் அடங்கிய படவரிசையைக் கவனமாகப் பாருங்கள். ஒவ்வொரு பகுதியிலும் அடங்கியுள்ள கண்டோஸ் சொக்கலெட் மேலுறைகளின் இனத்தைக் கண்டுபிடித்து, படவரிசையோடுள்ள, படத்தோடு தொடர்பான எண்ணுக்கு நேராக, அந்தக் குறிப்பிட்ட கண்டோஸ் சொக்கலெட்டின் பெயரைத் தெளிவாகவும், அழகாகவும எழுதவும்.

உதாரணமாக: படமிடப்பட்ட பகுதி கெண்டோஸ் சுபர்பைன் மில்க மேலுறையைச் சேர்ந்ததென்ருல் கெண்டோஸ் சுபர்பைன் மில்க், என்று படவரிசை யோடுள்ள அந்தப் பகுதிக்கான எண்ணுக்கு நேராக எழுதுக.




1 ..........
2 ..........
3 ..........
4 ..........
பெயர்: ..........
முகவரி: ..........

... கோட்டிற்கு நேராக வெட்டவும்.

கிடைக்கப்பெறும் எல்லாம் சரியான மிகத் தெளிவான விடைகளின் அடிப்படையில் பரிசுகள் கொடுக்கப்படும்.

ஒருவர் எத்தனை விடைகள் வேண்டுமானுலும் அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு விடையுடனும் (கெண்டோஸ் நெப்போலிடன் 10 சத. வில்லைகளின் மேலுறைசள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) கெண்டோஸ் சொக்கலெட் இரண்டு மேலுறைகள் அனுப்பப்படவேண்டும்.

உங்கள் விடைகளை, "கெண்டோஸ் மேலுறைப் போட்டி" என்று கவரின் இடது பக்க மூலையில் எழுதி.

கெண்டோஸ் மேலுறைப் போட்டி,
425/14, ஹெவ்லொக் ரோட், கொழும்பு-6
என்ற முகவரியிட்டு அனுப்பலாம்.

சிலோன் சொக்கலெட் லிமிட்டெட, ஷோவலஸ் அன்ட் ஹெட்ஜஸ் லிமிடெட், ரவி அட்வட்டைசிங் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களோ, அவர்களது குடும்ப உறுப்பினர்களோ இந்தப் போட்டியில் கலந்துகொள்ளத் தகுதியுடையவர்கள் அல்ல. போட்டிசம்பந்தமாகஎந்தவிதமானகடிதப்போக்குவரத்தும்அனுமதிக்கப்படமாட்டாது நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதும், கட்டுப்படுத்தக்கூடியதுமாகும்.

முடிவு திகதி: 31-8-69.

பரிசுபெற்ருேர் விபரம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

இதனையே உங்கள் விடைகளை அனுப்பப் பாவிக்கலாம். மேலதிகமான போட்டிக் கூபன்கள், உங்கள் கெண்டோஸ் சொக்கலட் விற்பனையாளர்களிடம் பெறலாம்.

விநியோகஸ்தர்கள்:
ஷோவலஸ் அன்ட் ஹெட்ஜஸ் லிமிட்டெட்—கொழும்பு 3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி அரசாங்கத்தினால் பெரிய விளைவுகள் ஏதும் ஏற்படாது

## யு. எஸ்., தென் வியட்னும் அரசுகள் அபிப்பிராயம்

வாஷிங்டன், ஜூன் 12

தென் வியட்னும் அரசாங்கத்துக்குப் போட்டியாகத் தேசிய விடுதலை முன்னணியினர் அமைத்துள்ள புரட்சி அரசாங்கம் பற்றிய அறிவித்தல் பெரிய விளைவுகள் எதையும் ஏற்படுத்தாது என்று அமெரிக்காவும், தென் வியட்னும் அரசாங்கமும் அறிவித்துள்ளன.

**அல்ஜீரியா அங்கீகாரம்**


இதற்கிடையில் சோவியத் யூனியனைத் தமது புரட்சி அரசாங்கத்தை அங்கீகரிக்கும்படி தேசிய விடுதலை முன்னணியினர் கோரியிருக்கிறார்களாம். இச்செய்தியை டாஸ் அறிவித்திருக்கிறது. இந்தக் கோரிக்கை பற்றிச் சோவியத் யூனியன் ஆராய்கின்றது.

அல்ஜீரியா ஏற்கனவே தேசிய விடுதலை முன்னணி அமைத்துள்ள புரட்சி அரசாங்கத்தை அங்கீகரித்துள்ளது.

**ஹோ—சி—மின் வரவேற்பு**


தேசிய விடுதலை முன்னணி அமைத்துள்ள புரட்சிகர ஆட்சி, வரலாற்றுப் புகழ்மிக்க நிகழ்ச்சியென்று வட வியட்னும் அதிபர் ஹோ-சி-மின் புகழ்ந்திருக்கிறார். பாரிஸில் நடைபெறும் வியட்னும் அமைதிப்பேச்சுக்களில் கலந்துகொள்ளும் தேசிய விடுதலை முன்னணிக் குழுவினர் தங்களைப் புரட்சி அரசாங்கத்தின் பிரதிநிதிகள் என்று அழைத்துக் கொள்கின்றனர். இந்தக் குழுவின் ஓர் அங்கத்தவரான திருமதி பின், புரட்சி அரசின் வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பதால் பாரிஸ் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் குழுவுக்கு இனி அவர்தான் தலைமைப் பிரதிநிதியாகவும் இருப்பார்.

தென்வியட்னுமில் கலப்பு அரசாங்கம் ஏற்படவேண்டும் என்ற அடிப்படையில் தொடர்ந்து பாரிஸ் பேச்சுக்களில் கலந்துகொள்ளப் போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர். தென் வியட்னுமிலுள்ள வெளிநாட்டுத் துருப்புகள் வெளியேற வேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தியுள்ளனர்.



கோயா ரக் போட்டியில் பரிசுக்குரியவர்களை இவர்கள் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கிருன்ற் அட்வட்டைஸிங் (இலங்கை) லிமிட்டட்டில் இத்தேர்வு நடைபெற்றது.

இடமிருந்து வலம்: திரு. டி. அபேவிக்கிரம (சுயாதீன பத்திரிகை சமாஜ விளம்பர மனேஜர்), திரு. பேர்ஸி கொலம்பஹே (லேக்ஹவுஸ் வெளிநாட்டு விளம்பர மனேஜர்), திரு. ஸ்ரீ எதிர்வீரா (விளம்பர அதிகாரி, றெக்கிற் அன் கல்மன் ஒவ் சிலோன் லிமிட்.), திருமதி டெய்ஸி நமசிவாயம் (அக்கவுண்டன்ற், கிருன் அட்வட்டைஸிங் (சிலோன் லிமிட்.), திரு. லலித் டிமெல் (விற்பனை மனேஜர், றெக்கிற் அன் கல்மன் ஒவ் (சிலோன் லிமிட்.), திரு. பி. ஜெயசிங்ஹா (உள்நாட்டமைச்சின் பிரதிநிதி), திரு. ஆர். எஸ். ஆர். சுந்தப்பா (கிருன்ற் அட்வட்டைஸிங் (சிலோன்) லிமிட்), திருமதி அல்பிறிடா (யு. எஸ். ஈ. எவ்,)




நாளைய வர்த்தக பவனியில் வாத்திய மெல்லிசை அளிக்கும் இரட்டையர் குழுவினர்.

## ரொடீஷிய நிலைமை பற்றி ஐ. நா. வில் இன்று விவாதம்

வாஷிங்டன், ஜூன். 12

ரொடீஷியாவில் அயன்ஸ்மித்தின் அரசியல் திட்டத்தின்மீது நடக்கவிருக்கும் வாக்கெடுப்பு சம்பந்தமாக ஐ.நா. பாதுகாப்புச்சபை நாளை ஆராயவிருக்கின்றது.

60 ஆசிய ஆபிரிக்க நாடுகளும் யூகோஸ்லவியாவும் இது சம்பந்தமாக ஒரு தீர்மானத்தை சபையில் சமர்ப்பித்துள்ளன,

ரொடீஷிய அரசின் நிறத்துவேஷப் போக்கை கண்டிக்கும்படியும் பொருளாதாரத் தடைகளை இறுக்கும்படியும் இந்தத் தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ரொடீஷியாவிலுள்ள பிரிட்டிஷ் கவர்னர் அயன்ஸ்மித்தின் அரசியல் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தமது பதவியைத் தாம் ராஜினமாச் செய்ய வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இந்த அரசியல் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் ரொடீஷிய மக்கள் பிரிட்டனிடமிருந்து மகாராணியிடமிருந்து வெகுதூரம் பிரிந்து போய் விடுவார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

### 16-வது பிரசவத்தில் நான்கு பிள்ளைகள்

சென்னை ஜூன், 12

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது பதினுருவது பிரசவத்தில் நான்கு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்த சம்பவமொன்று இங்கு நடந்துள்ளது. ஏற்கனவே பத்துக்குழந்தைகளையுடைய இத்தாய் தனது நான்கு பிள்ளைகளுடனும் சுகமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

### றெட்டரி கவர்னரின் யாழ் விஜயம்

யாழ்ப்பாணம், வியா.

றெட்டரி கவர்னர் திரு பீர் முகம்மது நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். யாழ்ப்பாணம் றெட்டரி கிளப் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் உட்பட பல

### 'விவசாயிகளுக்கு கந்தளாய் தண்ணீர் விநியோகத் தடுப்பு மனிதாபிமானமற்ற செயல்''

— மூதூர் எம். பி

திருகோணமலை, வியா.

''உணவு உற்பத்தி இயக்கத்திற்கு நாட்டுப் பிரஜைகள் ஒவ்வொருவரும் தமது உதவிகளைச் செய்ய வேண்டிய இந்தவேளையில் கந்தளாய், தம்பலகமம் மற்றும் குடியேற்றப் பகுதி வயல்க் காணிகளில் விவசாயஞ் செய்யஏதுவாக உள்ள கந்தளாய்க்குள் நீரை விவசாயிகட்குத் தடுத்து வைத்திருப்பது மாபெரும் பாதகச் செயலாகும். கடும் வரட்சியும் இதைத் தொடர்ந்து குளத்தில் நீர் வற்றியும் இருக்கும் இந்த நிலையில் கிடைக்கக் கூடிய ஒவ்வொரு ஏக்கர் காணியிலும் விவசாயம் செய்து கமக்காரன் எவ்வாறு பிழைக்க முடியும்? கிடைக்கக் கூடிய நீர்வசதிகள் அத்தொரு செயலாகும் இதை நாங்கள் எதிர்த்தே தீர வேண்டும்'' இவ்வாறு மூதூர் இரட்டைத் தொகுதியின் முதல் எம். பி ஜனுப். எம். ஈ. எச். முகமது அலி கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது இதுபற்றி அமைச்சர்களின் கவனத்தை நான் பல காலங்களுக்கு முன் கவரப் பண்ணி இருந்தேன் எதிர்நோக்கியிருந்த கடும் வரட்சி பற்றிக் கூட எச்சரிக்கை செய்திருந்தேன். நிவாரண உதவி என்ற ஒன்றை மட்டும் நம்பி விவசாயிகள் வாழ்வது விட முடியுமா? இந்த நிவாரண உதவி வேலைகளைக் கண்காணிப்பதற்கு விடப்படும் மேற்பார்வையாளர் களுள்



நாளைய வர்த்தக பவனியில் நாட்டிய நிகழ்ச்சி அளிக்கும் உடுப்பிட்டி பவானி நாட்டியாலய மாணவிகள்.

### 'தமிழ்நாட்டை விடவெகு தூரம் முன்னேறிவிட்டார்கள்' யாழ்ப்பாண சங்கீத கலைஞர்கள் பற்றி சித்தூரா கருத்து

யாழ்ப்பாணம், வியாழன்

''தமிழ்நாட்டிலும் பார்க்க யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்களுக்கு ... றுப்போகிறது. ஆதலால் எந்தவித கஷ்டம்வந்தாலும் நீங்கள் தொடர்ந்து சங்கீதத்துறையில் அர்வம்காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரம் முன்னேறிவிட்டார்கள்

## யாழ்ப்பாண சங்கீத கலைஞர்கள் பற்றி சித்தூரா கருத்து

யாழ்ப்பாணம், வியாழன்

"தமிழ் நாட்டிலும் பார்க்க யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்களுக்கு சங்கீத ஞானம் கூட இருக்கிறது என்பது எனது கருத்து. யாழ்ப்பாணத்தவர்கள் எதனையும் இலகுவில் வெகு திறமையாக கற்றுக்கொள்ளக்கூடிய சக்தி மிகுந்தவர்கள் என நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சங்கீதத்துறையிலும் அவர்கள் தமிழ்நாட்டைவிட வெகு தூரம் முன்னேறிவிட்டார்கள்."

இசைமன்னன் சித்தூர் சுப்பிரமணியம் இராமநாதன் இசைக்கல்லூரியில் நமது நிருபருக்களித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இங்கு கற்கும் மாணவர்கள் நல்ல தரமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். சாஸ்திரத்தை நல்ல முறையில் எழுதியிருக்கின்றனர். முன்னேறவேண்டும் என்ற ஆர்வம் ஒவ்வொரு மாணவர்களிடேயும் காணப்படுகிறது

மேடைக்கச்சேரி செய்யக்கூடிய தகுதி வாய்ந்தவர்கள் கூட இவர்களில் இருக்கின்றனர்கள் இன்னும் சிரமப்பட்டுப் படித்தால் இந்த நாட்டில் நல்ல புகழுடையக்கூடியவர்கள்.

இம்மாணவர்கள் சங்கீதத் துறையில இவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்ததற்குக் காரணம் இக்கல்லூரியின் அதிபர் திரு. நாராயணகிருஷ்ண பாகவதரினதும், மற்றும் ஆசிரியர்களினதும் ஊக்கம்தான். வயலின் ஆசிரியை செல்வி சுப்பையா மாணவர்களுக்கு நல்ல முறையில் கற்பித்து வருகிறார். அடுத்த வருடம் இக்கல்லூரியில் மிருதங்கம், வீணை போன்ற துறைகளும் இடம்பெறும் என எதிர்பார்க்கிறேன்

பரீட்சை முடிவைப் பற்றி சில மாணவர்கள் மனவருத்தமடையக்கூடாது பரீட்சைக்குத் தோற்றிய எல்லா மாணவர்களும் சித்தியடைந்திருக்கிறார்கள் இன்னும் முயற்சித்தால் 1-ம், 2-ம் பிரிவுகளிலும் சித்தியடையலாம் இப்பரீட்சைதான் அத்திபாரம் இன்னும் சங்கீதத்துறையில் முன்னேற எவ்வளவே இடமிருக்கிறது.

சங்கீதத்துறையில் உள்ள ஆர்வத்தை இடையில்விட்டுவிடக்கூடாது அப்படி இடையில் விட்டால், முன்பு காட்டிய ஆர்வம் பயனற்றுப்போகிறது. ஆகலால் எந்தவித கஷ்டம்வந்தாலும் நீங்கள் தொடர்ந்து சங்கீதத்துறையில் ஆர்வம்காட்டிவரவேண்டும்

சங்கீதத்துறையில் பட்டப்படிப்பு முடிவடைந்தபின், சங்கீதத்தைக் கற்பிக்கும் முறைபற்றி ஒருவருடம் பயிற்சி பெறுவது நல்லது. சங்கிதத்துறையில் முன்னேற இப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஒரு 'சபா' ஒன்று ஏற்படுத்தல் நாட்டின் பல பாகங்களிலும் சங்கீதக் கச்சேரிகள் செய்யலாம். இம்மாணவர்கள் ஒவ்வொருமாதமும் இக் கல்லூரியில் கச்சேரி செய்யவேண்டும். மாணவர்களும் பெற்றோர்களும் இக்கச்சேரிகளைப் பார்ப்பதனால் மேலும் பல மாணவர்களை இக்கல்லூரியில் சேர்க்கக்கூடிய நிலைஏற்படும்.

இந்தியாவில் பட்டம் பெற்ற ஒரு வித்துவானிலும் பார்க்க இங்குள்ள மாணவர்களுக்கு சங்கீதத்துறையில் அதிகஞானம் இருக்கிறது.

## சாட்சிக்கு 'வாரண்ட்'

முல்லைத்தீவு, வியா

முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பைச் சேர்ந்த ஒருவர் வீதியில் மது போதையில் நின்று பொதுமக்களுக்குத் தொந்தரவு கொடுத்தார் என முல்லைத்தீவுப் பொலிசாரால் தொடரப்பட்டவழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு ஆர்.நவரத்தினம் முன்னிலையில்விசாரணைக்கு எடுக்கப் பட்டபோது பொலிஸ் தரப்பின் முக்கிய சாட்சியான செல்லையா, இராசையா நீதிமன்றத்தில் சமுகம் கொடுக்காததால்நீதிபதி அவர்மீது வாரண்ட் பிறப்பித்துமேல் விசாரணையை இம்மாதம் 30ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## அனுதாபம்

கோட்டை, வியா

தெல்லிப்பளையைச் சேர்ந்த சிற்பி திரு. யோவேல் போல் காலமானதையிட்டு அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் கொழும்புக்கிளை அனுதாபத் தீர்மானமொன்றை நிறைவேற்றியது.

வடபகுதியில் அமைக்கப்பட்ட 3 பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்றதற்கு பிரதமருக்கும், கல்வி அமைச்சருக்குட் நன்றி தெரிவிக்கும் தீர்மானமும் நிறை வேறியது.

## யாழ் விஜயம்

யாழ்ப்பாணம், வியா.

ரொட்டரி கவர்னர் திரு பீர் முகம்மது நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். யாழ்ப்பாணம் ரொட்டரி கிளப் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் உட்பட பலரும் இவரை வரவேற்றார்கள். நேற்றிரவு யாழ்ப்பாணம் புளூறிபன் ஹொட்டலில் இராப்போசன விருந்தும் அளிக்கப்பட்டது.

(காநி)

## 'தமிழ் கட்சிகள் தவறிவிட்டனர்'

வல்வெட்டித்துறை, வியா

"வடபகுதியில் அரசாங்கம் பௌத்த பாடசாலைகளை கையேற்று சிங்களத்தை போதனமொழியாக மாற்றுவதற்கு முயற்சி செய்த போது தமிழ் மக்கள் ஒற்றுமைபட்டு அதனை முழுமூச்சுடன் எதிர்க்க வேண்டும் என்று சர்வகட்சி மகாநாடு ஒன்று கூட்டப்பட்ட போது சில தமிழ்க் கட்சிகள் மகாநாட்டுக்கு சமுகமளிக்கத் தவறிவிட்டன. இவர்களால் தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை கிட்டும் என்று நினைப்பது பகல் கனவாகும்."

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை வல்வெட்டித்துறை கெருடாவிலில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சிவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசினார்.

## விறகு தட்டுப்பாடு

கோப்பாய், வியாழன்

கோப்பாய் அரசினர்விறகு காலையில் கடந்த ஒருமாத காலமாக விறகுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். பல பிரமுகர்கள் இதுபற்றி உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டும் இதுவரை எதுவித பலனும் ஏற்படவில்லையாம்.

## உற்சவம்

கோப்பாய், வியாழன்

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 20-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. 28-ம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் மேற்படி ஆலயத்தில் நடைபெறும்.

...செய்யலாம். கடும் வரட்சியும் இதைத் தொடர்ந்து குளத்தில் நீர் வற்றியும் இருக்கும் இந்த நிலையில் கிடைக்கக் கூடிய ஒவ்வொரு ஏக்கர் காணியிலும் விவசாயம் செய்து கமக்காரன் எவ்வாறு பிழைக்க முடியும்? கிடைக்கக் கூடிய நீர்வசதிகள் அத்தனையையும் இந்த ஏழை விவசாயிகளுக்கல்லவா கொடுத்துதவ வேண்டும். அரசாங்கத்தின் இந்த முடிவு மனிதாபிமானத்துக்கே முரண்பாடான நோக்கியிருந்த கடும் வரட்சி பற்றிக் கூட எச்சரிக்கை செய்திருந்தேன். நிவாரண உதவி என்ற ஒன்றை மட்டும் நம்பி விவசாயிகள் வாழ்வது விட முடியுமா? இந்த நிவாரண உதவி வேலைகளைக் கண்காணிப்பதற்கு விடப்படும் மேற்பார்வையாளர்களுள் கூடப்பல விஷமிகள் இருப்பர் எல்லோருக்கும் உதவி அளிப்பதோடு புராண வயல் சொந்தக்காரர் கட்கும் விவசாயிகட்கும் நஷ்டஈடும் வழங்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

# வலி. கிழக்கு ஊடாக நாவலர் சிலை

கோப்பாய், வியாழன்

நாவலர் பெருமான் திருவுருவச்சிலை எதிர்வரும் 27ம் திகதி பிற்பகல் வலி கிழக்குப் பகுதிக் கிராமங்களுக்கு ஊடாக எடுத்துச் செல்லப்படவுள்ளது. இச்சிலையை சிறந்த முறையில் வரவேற்பதற்கான ஆலோசனைக் கூட்டம் வலி. கிழக்கு காரியாதிகாரி திரு வி. கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. வலி. கிழக்குப் பகுதியில் ஊர்வல நேரங்களும், கிராமங்களும் வருமாறு;-

பிற்பகல் 1-30 மணி வலி கிழக்குப் பகுதியின் எல்லையில் காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளை ஊர்வலத்தை வரவேற்பார். 1-40 மணி தம்பாலை, அச்சுவேலிச்சந்தி, 2 மணி, 2-20 ஆவரங்கால் சிவன்கோவில், 2-30 புத்தூர் கிராமசபை, 2-45 சிறுப்பிட்டிசைவவித்தியாசாலை, 3 மணி அத்தியார் இந்துக்கல்லூரி, 3-20 கோப்பாய் சந்தி, 3-30 கோப்பாய்நாவலர் பாடசாலை, 3-45 இருபாலைச்சந்திக்கூடாக சிலை கோண்டாவில் நோக்கிச் செல்லும்.

### வரவேற்பவர்கள்

வலிகிழக்குப்பகுதியில் நாவலரது திருவுருவச்சிலையை பின்வருவோர் கீழ்க்காணும் இடங்களில் வரவேற்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தம்பாலை- கிராமசேவகர் ரி. கிருஷ்ணராசா, கி. மு. ச. தலைவர் எம். கந்தசாமி. அச்சுவேலிச்சந்தி- கி மு ச தலைவர் பி. எஸ். யோசேப், கிராமசேவகர் எஸ். சோமசுந்தரம், ரி.குணரத்தினம், ஆவரங்கால- கிராமசேவகர் கே. அமிர்தலிங்கம், கி மு ச தலைவர் கே, சின்னத்துரை, புத்தூர் கி மு ச தலைவர் பி. மாணிக்கவாசகர், கிராம சேவகர் கே. அமிர்தலிங்கம், சனசமூக நிலையத் தலைவர் எம். திருநாவுக்கரசு, கி ச தலைவர் எஸ். நடராசா, சிறுப்பிட்டி- கி மு ச தலைவர் கே. அருணசலம், கிராமசேவகர் கே. துரைசிங்கம், நீர்வேலி - அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் எஸ். ஶ்ரீநிவாசன், கி ச தலைவர் ஆர். அப்பாத்துரை, கிராமசேவகர் எஸ். வேலாயுதபிள்ளை, கி மு ச தலைவர் கே. வி. கனகரத்தினம் ஜே. பி., கோப்பாய் வடக்கு- கிராமசபைத் தலைவர் ரி. பரமானந்தராசா, கிராம சேவகர் எஸ். யோகலிங்கம், திரு. பரமலிங்கம், கி மு ச தலைவர் கே. ஆர். குமாரசாமி, கோப்பாய் தெற்கு கிறிஸ்தவ கல்லூரி அதிபர் இ. கே. சண்முகநாதன், கி ச தலைவர் ரி. பரமானந்தராசா, கிராம சேவகர் எஸ். ஆறுமுகம், நாவலர் பாடசாலை தலைமை ஆசிரியர் எம். வல்லிபுரம், நாவலடி சனசமூக நிலையத் தலைவர் ஏ. சி. செல்வராசா இருமாலைச்சந்தி - திருவருள் தவநெறிமன்றம், கி ச தலைவர் ரி. பரமானந்தராசா, கிராமசேவகர் எஸ். ஆறுமுகம், இருபாலை மத்திய சனசமூக நிலையத் தலைவர் கே. விநாயகஜோதி.

## எதிரிவிடுதலை

அளவெட்டி, புதன்

கடையை உடைத்து திருடியதாக குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் நீதிபதி எதிரியை இன்று விடுதலை செய்தார்.

அளவெட்டி தெற்கைச் சேர்ந்தஒரு கடையைஉடைத்து 50 ரூபாவை களவாடியதாக எஸ். தர்மலிங்கம் என்பவர் மீது சுன்னாகப் பொலிசார் தொடர்ந்திருந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப் பட்டபோது நீதிபதி எதிரியைவிடுதலை செய்தார்.



நாளைய வர்த்தக பவனியில் நாட்டிய நிகழ்ச்சி அளிக்கும் உடுப்பிட்டி பவானி நாட்டியாலய மாணவிகள்.



நாளைய வர்த்தக பவனியில் வாத்திய இசை அளிக்கும் உடுப்பிட்டி பவானி மெல்லிசை மன்றம்.


உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள் செலுத்தும் பரிபூரண அஞ்சலி

0231

**ஏ. எப். ரேமண்ட்ஸ்**

ஈமக் கிரியை ஏற்பாடுகள்

புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.

147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சுண்டிக்குளி சந்தியிலிருந்து 50 யார் தூரம்)

- இரவு பகல் எந்நேரமும் கிடைக்கும் சேவை.
- பண வசதிக்கு ஏற்ற பிரேதப் பெட்டிகள்.
- நவீன பாடை வாகனம்.
- பூதவுடலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்
- புதைகுழியில் பிரேதப் பெட்டியைச் சுயமாக இறக்கும் கருவி.
- அழகான சமாதிகள்.



ஏஎப் ரேமண்ட்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நாளை (14-6-69) சனிக்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்திற்கு விடுமுறையாதலால் 15ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டும் ஈழநாடு' வெளிவராது.

## மணிவாக்கு

உறுதியோ, நடத்தைமுறையோ இல்லாத ஒருவர். திசைதிருப்பி இல்லாத ஒரு கப்பலைப் போன்றனர்.

...மகாத்மாகாந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம். சௌமியவருஷம் வைகாசி மாதம் 31ந் திகதி (13-6-69)

## பொதுஜன விழா

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவை, எமது எஜமானர்களாகிய பொதுமக்களே தங்கள் சொந்த விழாவாக மதித்து சிறப்பாக நடத்த முன்வந்துள்ளது. 'ஈழநாடு' ஸ்தாபனத்துக்கு பெருமகிழ்ச்சியையும் பெருமையையுமளிக்கின்றது.

முற்காலத்திலே மக்கள் வேதங்கள் படித்து, அதன்படி நடக்க முற்பட்டனர். ஆனால் இக்காலத்திலே வேதங்களுக்குப் பதிலாக, தினசரி பத்திரிகைகளையே மக்கள் படித்து, தங்கள் வாழ்க்கையை வகுத்துக்கொள்ளுகின்றனர். ஆகவே தினசரிப் பத்திரிகைகளின் பொறுப்பு இன்று மிக அதிகம் வேதங்களையும் சாத்திரங்களையும் எழுதியவர்களுக்கு எவ்வளவு பொறுப்புண்டோ அவ்வளவு பொறுப்பு தினசரிப் பத்திரிகைகளுக்கு உண்டு' என்று இலட்சியப் பத்திரிகைக்காரரான மகாத்மாகாந்தி அறிவுறுத்தியுள்ளார். அந்த யோசனைக் கிணங்க தன் பொறுப்பை உணர்ந்து நடக்கமுயலும் 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொதுமக்களே விழா எடுக்க முற்பட்டது' எந்தப் பத்திரிகைக்கும் கிடைத்திராத பெரிய பாராட்டாகும்.

அசாதாரணமான இந்தப் பாராட்டுவிழாவிலே, இலக்கியம், பேச்சு, விளையாட்டு முதலிய பல துறைகளிலும் நம் மக்கள் வளர்ந்து முன்னேற ஊக்கமளிக்கும் முறையில் பல போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் கலந்து கொண்டவர்களையும், வெற்றி பெற்றவர்களையும் பாராட்டுவதுடன், வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிய பல பெருந்தகைகளுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

ஒரு பத்திரிகையின் வாழ்விலே முதல் பத்தாண்டுகள் சோதனைமிக்கதாகும். இப்பத்திரிகையில் எவ்வளவு குறைகளுண்டென்பதையும் நாம் உணர்வோம். என்றாலும் குறைகளையெல்லாம் பொருட்படுத்தாமல், குணங்களை மட்டும் கொண்டு எங்களைப்பாராட்ட பொதுமக்களே முன்வந்ததிலிருந்து, 'ஈழநாடு' பத்திரிகையின் எதிர்காலம் பொதுமக்களின் அமோகமான அபிமானத்தில் மேன்மேலும் வளருமென்ற புதிய நம்பிக்கையும் ஏற்படுவதாயுள்ளது. 'ஈழநாடு' ஸ்தாபனத்தை பொதுமக்களின் உடைமையாக்கும் காலம் நெருங்குவதாக அதிபர் க. சி. தங்கராசா அவர்கள் பத்தாவதாண்டு நிறைவுமலரில் குறிப்பிட்டிருந்தார்கள் இப்போது பொதுமக்களே இவ்விழாவை நடத்துவதைப் பார்க்கையில் அந்த நல்லநாள் வந்துவிட்டதாகவே தோன்றுகின்றது.

பொதுமக்களே 'ஈழநாடு' பத்திரிகையின் உண்மை எஜமானர்கள். அவர்கள் நல்வாழ்வுக்கு உழைத்து அவர்களது பாராட்டுகளைப் பெறுவது எங்களது பெரும் பாக்கியமாகும். பத்திரிகை நெறி தவறாமல், பொதுமக்களின் பணியை விருப்பு வெறுப்புகளின்றி மேன்மேலும் பயனுள்ள முறையில் செய்ய, இந்தப் பொதுஜனவிழா எங்களுக்குப் புதிய உற்சாகமும் நம்பிக்கையும் அளிப்பதாக இருக்கின்றது. பொதுமக்களின் வாழ்வில்தான் 'ஈழநாடு' பத்திரிகையின் வாழ்வும் அடங்கியுள்ளதால், இந்தப் புனிதப் பணிக்கு இச் சமயம் எங்களை மீண்டும் பணிவுடன் அர்ப்பணித்துக் கொள்கிறோம்.

# கோட்டை வெளியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாலய வாசலில் ஆரம்பமாகும் ஊர்வலம், விநோத உடை ஆகியவற்றில் கலந்து கொள்பவர்கள் 7 மணிக்கே அங்கு சமூகம் கொடுக்க வேண்டும்.

இன்று கூடைப்பந்தாட்டத்தின் இறுதிப் போட்டி நடைபெறுகின்றது. இப்போட்டியில் 'சென். பற்றிக்ஸ்'' கல்லூரியும் ஓல்ட் கோல்ஸ்ட் கோஷ்டியும் மோதுகின்றன, இவ்வைபவத்துக்கு விளையாட்டமைச்சின் உதவி டைரக்டர் டாக்டர் ஜே. சி. துரைசிங்கம்பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். மத்திய கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெறும்.

0 0

## விநோத உடைப் போட்டியில் பங்குகொள்வோர்

நாளை காலை நடைபெறும் 'ஈழநாடு' விநோத உடைப் போட்டியில் கலந்துகொள்வோர்:

க. முருகதாசன்-தெல்லிப்பழை.

எஸ். இராஜேந்திரம்-மாவிட்டபுரம்.

கலையரசன் நாடக அரங்கம்-நவாலி.

க. தர்மராசா-யாழ்ப்பாணம்.

சங்கிலியன் மன்ற சனசமூக நிலையம்-நல்லூர்.

ஏ. ரி. யோகநாதன்-யாழ்ப்பாணம்.

வி. தியாகேந்திரன்-யாழ்ப்பாணம்.

நல்லூர் நகைச்சுவை நாடகமன்றம்.

சி. விநோதினி-வண்ணார்பண்ணை.

ப. வை. ஜெயபாலன், வே. குமாரசாமி சர்மா-பன்னாலை கணேச சனசமூக நிலையம்.

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையம்.

சு. சிவமுத்துலிங்கம்-அத்தியடி.

மு. விஜயரத்தினம்-திருநெல்வேலி.

என். ஞானேஸ்வரன்-நவாலி.

ஆர். ரெங்கசாமி-வண்ணார்பண்ணை.

ச. ஜகந்நாதன்-நவாலி தெற்கு, மானிப்பாய். வயது 13

0 0

## அலங்கார ஊர்வலப் பாதை

பல வர்த்தக ஸ்தாபனங்களும் கலந்துகொள்ளும் அலங்கார வர்த்தகப் பவனியும், உடையலங்கார வர்த்தகப் பவனியும் 14ந் திகதி காலை 8 மணிக்கு 'ஈழநாடு' காரியாலய வாசலிலிருந்து பின்வரும் வீதிகளில் செல்லும்.

'ஈழநாடு' காரியாலயத்திலிருந்து வடக்கு நோக்கி மானிப்பாய் வீதி வழியாக ஐந்து சந்தி.

அங்கிருந்து வலப்பக்கம் திரும்பி மனோகராத்தியேட்டர்-நாவலர் பாடசாலைச் சந்தி.

அங்கிருந்து காங்கேசன்துறைவீதி வழியாக வடக்கு நோக்கித் தட்டாதெருச் சந்தி..

அங்கிருந்து வலப்பக்கம் திரும்பி அரசடிவீதி வழியாகக் கந்தர்மடச் சந்தி, நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வழியாக முத்திரைச்சந்தை.

அங்கிருந்து கச்சேரி நல்லூர்வீதி வழியாக வை. எம். சி. ஏ. சந்தி.

கண்டிவீதி மெயின்வீதி வழியாக மில்க்பார் முதலாம் குறுக்குத்தெருச்சந்தி.

அங்கிருந்து வலப்பக்கமாகத் திரும்பி, வேம்படிப் பாடசாலையைக் கடந்து ஆஸ்பத்திரிச் சந்தி.

ஆஸ்பத்திரிவீதி வழியாக யாழ்ப்பாணம் நவீன மார்க்கெட்வரை வந்து ராணித்தியேட்டரை அடைந்து, கஸ்தூரியார்வீதி, பெரிய கடைச்சந்தியை அடைதல்.

அங்கிருந்து வலப்பக்கமாகத் திரும்பி, கஸ்தூரியார் வீதி வழியாகக் கன்னாதிட்டி, செல்லம்ஸ் ஸ்ருடியோச் சந்தியை அடைந்து, இடப்பக்கமாகத் திரும்பி வண்ணை சிவன்கோவிலை அடைதல்.

அங்கிருந்து தெற்கு நோக்கிக் காங்கேசன்துறை வீதி வழியாகப் பெரியகடை சத்திரத்துச் சந்தி, பெரிய தபாற்கந்தோர் வழியாக ஊர்வலம் நண்பகல் பன்னிரண்டுமணிக்கு கோட்டை மைதானத்தை வந்தடையும்.

0 0 0

## வாத்தியக் குழுவினர்

நாளைய விழாவின் வர்த்தகப் பவனியில் வாத்திய இசையளிக்கும் குழுக்களின் விபரம்:

### இரட்டையர் குழு

வி. எம். அருமைநாதர்-பாட்டு, செல்வி எஸ். ரி. பார்வதி-பாட்டு, பி. கலாமணி-பியானோ, எக்கோடியன், எம். றஞ்சன்-எலக்றிக் கிற்றார், தேசிகர்-ஹார்மோனியம், கே. ஸி. விநாயகேந்திரன்-டோல், டோல்கி கே. ஸி. யோகேந்திரன்-ஆல்ரவுண்ட், ஈழத்து சதன்-குரல் வேறுபாடு.

### கலாலயா குழு

எம். எஸ். தேவராஜன்-பாட்டு, செல்வி எம். ஸ்ரீதக்சணி-பாட்டு, ஜே. மண்டலேஸ்வரன்-மிருதங்கம், தபேலா, டோல்கி, அ. துரைரத்தினம்-வயலின், கி. தியாகராஜா-மண்டலின், சோ. சபானந்தன்-பொங்கோஸ், மரக்காஷ், ஆல்ரவுண்ட், சி. ஆனந்தராஜா-எக்கோடியன்.

### பவானி நாட்டியாலயம்

பிரேமலோசனி, ஜெயலட்சுமி-மயில்நடனம், கிருஷ்ணகுமாரி-சிவதாண்டவம், புவனேஸ்வரி ரஞ்சிதாரமணி-அலாரிப்பு, மாலதி, விமலநாயகி, ஞானேஸ்வரி, ஜீவாமணி, வள்ளிநாயகி, மங்களேஸ்வரி-கும்மி ஜெயலட்சுமி- ருவிற்ஸ். இயக்குனர் சி. ஆனந்தராசா.

### பண்டத்தரிப்பு றெக்ஸ் குழு

ஸ்ரனி - பாட்டு, அழக

மெய்கண்டான் அதிபர் திரு. என். இரத்தினசபாபதி -பணமுடிச்சு.

கொழும்பு லீலா ஸ்டோர்ஸ் அச்சக உரிமையாளர் திரு ரி. சின்னத்துரை-பணமுடிச்சு.

யாழ்ப்பாணம் என். சாம்பசிவம் அன்கோ- விலையுயர்ந்த பரிசுப் பொருட்கள்.

யாழ்ப்பாணம் மொகிடீன் ஜுவல்லர்ஸ்- பரிசுப் பொருள்.

எஸ். ஆர் எஸ். ரெக்ஸ் ரைல்ஸ்- ஒரு டிப்ளோமா சேலை.

மானிப்பாய் லெஸ்லி சினிமா- இரண்டு குத்து விளக்கு.

சீடில்ஸ் ஸ்தாபனம் ஒரு ரேடியோ.

0 0 0

## நாளை நிகழ்ச்சிகள்

14—6—69 சனிக்கிழமை:

காலை 5-30 மணிக்கு 'ஈழநாடு' காரியாலய வாசலிலிருந்து 26 மைல் மரதன் ஓட்டம் ஆரம்பம். (முழு விபரங்களும் 14-ம் திகதி 'ஈழநா'ட்டில் வெளிவரும்)

காலை 8மணிக்கு 'ஈழநாடு' காரியாலய வாசலிலிருந்து அலங்கார வர்த்தகவண்டிகளதும், விநோதஉடையாளர்களதும் ஊர்வலம் ஆரம்பமாகி பகல் 12 மணிக்கு யாழ். ஸ்டேடியம் மைதானத்தை வந்தடையும். (ஊர்வலபாதை) கலந்துகொள்வோர் பற்றிய முழு விபரங்களும் 14-ம் திகதி ஈழநாட்டில் வெளிவரும்)

பிற்பகல் 4-30 மணிக்கு யாழ். ஸ்டேடியத்தில் உதைபந்தாட்டம்.

பிற்பகல் 4-30 மணிக்கு மத்திய கல்லூரியில் (செற் அப்) சுரபந்தாட்ட இறுதிப் போட்டி.

14—6—69 மாலை நிகழ்ச்சிகள்:

யாழ். திறந்த வெளியரங்கு-கலைவிழா! என். ஆர். சின்னராஜா குழுவினரின் நாதஸ்வரம் வேம்படி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியன அளிக்கும் நாட்டியநிகழ்ச்சி.

விழாப்போட்டிகளுக்கான பரிசில்களை டாக்டர் வி. ரி பசுபதி வழங்குவார்.

சொற்பொழிவுகளை அடுத்து இந்து மகளிர் கல்லூரி மாணவர்களின் 'ருக்குவின் கலியாணம்', தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் 'வன்றெண்டர்' என்ற நாடகமும்

'ஈழநாடு'

## முதலெழுத்துப் போட்டி-(8)

இந்தப் போட்டிக்கு நாள்தோறும் வந்து குவியும் கடிதங்களைப் பார்க்குமிடத்தில் நேயர்கள் உள்ளத்தில் இது நிரந்தரமான ஓர் இடத்தைப்பெற்றுவிட்டதென்றே கூறவேண்டும். திறமான விடைகளைத்தெரிவு செய்வது பெரும்பாடாய் போய் விட்டது. 'கொழும்பு கலியாணத் தாகர் சங்கம் என்ற பெயரின் முதலெழுத்துக்கு இன்னொரு ஹாஸ்யமான பெயரை கொடுங்கள் என்று கேட்டிருந்தோம்.

### முதலாம்பரிசு:

மிகச் சிறந்ததென போட்டிக்குழு தீர்மானித்தது கீழ் தரப்படும் விடையே:-

**'கொஞ்சமேனும் கழுத்தறுக்க தயங்காத சத்துருக்கள்'**

இதை எழுதி பத்து ரூபாய் பரிசுபெறுபவர்: கு. நித்தியசீலன், 29, செட்டித்தெரு, நல்லூர்.

# ஐயாறன் எழுதுவது

நல்லூர் கோயில் தெற்கு வீதியிலே நாவலர் பெருமானின் உருவச்சிலைக்கான அத்திபாரக் கல் நாட்டுவிழாவுக்கு நேற்று சற்றும் எதிர்பாராதமுறையில் ஓர் அன்பர் என்னை அழைத்துச் சென்றார்.

அந்த இடம் 1874-ம் ஆண்டிலே அதாவது அவர் முத்தியடைவதற்கு நான்கு வருடத்துக்கு முன்பு அவருக்கு அவரது சீடரான ஸ்ரீ கார்த்திகேய ஐயரால் விற்கப்பெற்றதாம். அந்த இடத்திலே நாவலர் அவர்கள் சைவப்பணிகள் செய்து வந்ததாகத் தெரிகிறது.

சமீபத்தில் அவ்வை துரைசாமிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் வந்தபோது அந்த இடத்தை வந்து பார்க்கையில். அங்குள்ள புனித மண்ணைக் கையால்தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டதுடன் தலையிலும் சிறிது வைத்துக்கொண்டாராம். ஐந்தாங்குரவரென மதிக்கப்படும் ஒரு பெரியாரிடம் தமக்குள்ள பெரும் பக்தியை அவர் இப்படித் தெரிவித்துக்கொண்டதாக அறிந்தேன்.

அப்பேற்பட்ட புனித இடத்திலே கால் வைத்து நடக்கவும் கூச்சமாக இருந்தது. என்ன செய்வது; அரசாங்கத்திடமிருந்து மீண்டும் இந்தக் காணியை 99 வருட குத்தகைக்குப் பெற்று, அந்த இடத்தில் நாவலர் சிலையை வைப்பதுடன், அங்கு மண்டபம் புத்தகசாலை முதலியன கட்டவும் அஸ்திவாரக்கல்லை திருப்பணிச்சபைத் தலைவர் ஸ்ரீகாந்தா அவர்கள் பக்தி சிரத்தையுடன் நாட்டினார். பல சைவப் பிரமுகர்கள் வந்திருந்தார்கள். மேளவாத்தியம் முழங்க, தேவார பாராயணத்துடன் இந்த விழா சிறப்பாக நடைபெற்றது.

குறைந்த செலவிலே சிறந்த பணி செய்யக்கூடிய மாநகரசபை இஞ்சினியர் வைத்திலிங்கத்தார் இந்த மண்டபம் கட்டும் பொறுப்பை ஏற்றிருக்கின்றார். புகழ்பெற்ற தங்கவேலுஸ்தபதியார் இவ்வேலையில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டிருப்பதைக் கண்டேன். இஞ்சினியர் ஆறுமுகத்தார் உருவச்சிலைக்கான அழகிய பீடத்தின் படத்தைத் தீட்டியுள்ளார். பல பக்தி உள்ளங்கள் இந்தத் திருப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் பூரணமாக ஈடுபட்டுள்ளதைக்காண ஈழத்திலே சைவம் மீண்டும் புத்துயிர் பெற்று தழைக்கப்போவதாக உணர்ந்தேன். எல்லாம் அந்த நல்லூர் முருகனின் பேரருளே!

0 0 0

இப்போது நல்லூர் கோயிலின் உட்பிரகாரத்தை விஸ்தரிக்கும் திருப்பணி நடந்து வருகின்றது. பழையசுவரை இடித்து, வசந்தமண்டபத்துக்கு நேரே வாசல் வைக்கப்போகிறார்களாம். தெருவீதியிலிருந்தும் பக்தர்கள் முருகனை தரிசிக்கமுடிவதாக இருக்கும்.

அந்தச் சுவரிலுள்ள செங்கற்கள் தமிழகத்திலிருந்தே வந்ததாக ஓர் அன்பர் தெரிவித்தார். அக்காலத்தில் செங்கல், ஓடுகள் எல்லாம் தமிழகத்திலிருந்தே வந்தனவாம்! இக்கோயில் விஸ்தரிக்கப்படுவதால் பக்தர்கள் வழிபட அதிக வசதியாக இருக்கும். இக்கோயில் அபிவிருத்தி பற்றி நாவலர் பெருமான் கூறியுள்ளயோசனைகளையும் நிறைவேற்றி வைக்கும் காலம் சீக்கிரத்தில் வருமென்று நம்புவோம்.

0 0 0

ரோட்டரி கவர்னர் பீர் முகமது நேற்று முன்தினம் யாழ்ப்பாண ரோட்டரி கிளப் விருந்தில் கலந்துகொண்டு நல்ல கருத்துரைகளைக் கூறினார் அவர் ஓர் இஞ்சினியர். கொல்லத்தைச்சேர்ந்தவர். அவர் சென்றவாரம் புதுக்கோட்டை ரோட்டரி சங்கத்துக்குச் சென்றிருக்கையில், 'திருவள்ளுவரும் சமூகமும்' என்பதுபற்றி ஓர் கருத்து அரங்கு நடைபெற்றதாம். 'இரந்தும் உயிர்வாழவேண்டின் பரந்துகெடு உலகு இயற்றியான்' என்று வள்ளுவர் கூறியதை வற்புறுத்தி, தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதியார் வள்ளுவர் வழியிலே முழங்கியுள்ளதை உணர்ச்சியுடன் விளக்கிய மாணவருக்கே பரிசு கிடைத்ததாம்.

தமிழ்கூறும் நல்லுலகிலே பலர் பிச்சை எடுத்தும் உயிர் வாழமுடியாமல் தவிப்பது பகிரங்க ரகசியம். இந்தப் பரிதாப நிலைமாற நாம் உருப்படியாக என்ன செய்யப்போகிறோம்?

யாழ்ப்பாண ரோட்டரி

வர்த்தக விநோத உடைப் போட்டி அமைப்பாளரும் பிரதம அறிவிப்பாளரும்:- திரு. இ. மகாதேவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்களையும் பாராட்டுவ துடன், வெற்றிபெற்றவர்க ளுக்குப் பரிசுகள் வழங்கிய பல பெருந்தகைகளுக்கும் நமது நன்றியைத் தெரிவித் வும் அடங்கியுள்ளதால், இந் தப் புனிதப் பணிக்கு இச் சம யம் எங்களை மீண்டும் பணிவு டன் அர்ப்பணித்துக் கொள்கி ரேம்.

# தேர்த்திருவிழாக் காணும் பாஷையூர் அந்தோனியார்




பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயம் வட இலங்கையில் பிரசித்தி பெற்ற ஒரு திருத்தலமாகும். இன்று விழாக் கோலம் பூண்டிருக்கும் இக்கோவில் 1844-ம் ஆண்டு யுவக்கீம் கபிரிகேல் என்னும் அடிகளாரால் சிறிதாக அமைக்கப்பட்டிருந்தது.

இத்தேவாலயத்தின்போட்டிச்கோ எனப்படும் முகப்பு மண்டபம் அந்நாட்களில் பாஷையூர் கட்டளைக்குரவராகப் பணியாற்றிய அருட்திரு. பஸ்தியன் அவர்களால் அத்திபாரம் இடப்பட்டது. ஆயினும் ஆண்டுகள் பல கடந்தபின்னர் அப்பணியை முடித்து வைத்தவர் தற்போதைய கட்டளைக்குரவராக இருக்கும் அருட்திரு. கே. பி. சந்தியாபிள்ளை அவர்களாகும்.

இவ் ஆலயத்தின் உற்சவம் ஆண்டு தோறும் ஆனித் திங்கள் முதலாம் நாள் ஆரம்பமாகி பதின்மூன்றும் திகதி மாலை சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடையும். புனிதரின் திருநாளுக்கு ஈழத்தின் பல பகுதிகளிலுமிருந்து பல சமயத்தவர்கள் ஆயிரக் கணக்கில் அங்கே கூடுவார்கள். அந்தோனியார் பக்தர்களான அவ்வூர் மக்கள் தவமுனிவரின் திருச்சொரூபத்தை ஊர்வலமாக எடுத்து வருவதற்கு தேர் ஒன்றை அமைக்க முன்வந்தனர். தமிழ் சிற்ப முறைப்படியான அழகிய தேர் ஒன்றை அருட்திரு. ஜே. நீக்கலஸ் அவர்கள் கண்காணிப்பில் 1951-ம் ஆண்டில் செய்து முடித்தனர். கண்கவர் வேலைப்பாடுகள் கொண்ட அலங்காரத் தேரிலே புனித அந்தோனியார் பவனிவரும் காட்சியைக் காண கோடிக் கண் வேண்டும்.

— அ. ஜேக்கப்

## கண்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன் வட இலங்கை விஞ்ஞான ஆசிரியர் சங்க ஆதரவுடன் அமெரிக்க தகவல் பகுதியினரால் நடாத்தப்படும் விஞ்ஞான தொழில்நுட்ப புத்தகக் கண்காட்சி ஒன்றுஇம் மாதம் 15ந் திகதி மாலை பொதுஜன நூல் நிலையத்தில் இடம் பெறும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூன் மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 'கொஞ்சமேனும் கழுத்தறுக்க தயங்காத சத்துருக்கள்'

இதை எழுதி பத்து ரூபாய் பரிசுபெறுபவர்: க. நித்தியசீலன், 29, செட்டித்தெரு, நல்லூர்.

இரண்டாம்பரிசு:

## 'கொழுவிவிட்டு கண்குளிரும் தலைவர்கள் சமாசம்'

இதற்கு ஐந்துரூபாய் பரிசு பெறுபவர்: அ. கனகசூரியர் ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

### பாராட்டுக்குரியவை

பல நேயர்கள் சிறந்த விடைகளை எழுதியனுப்பிய போதிலும் சிலவற்றை மட்டும் கீழே தருகிறோம்:- 'கொப்பளிக்க கஞ்சியில்லை, தங்குவதற்கு சங்க சங்கமுண்டு' (என். விஷ்ணுகாந்தன், பருத்தித்துறை), 'கொண்டையில்லா கன்னியர்க்கு தஞ்சமளிக்கும் சகாக்கள்' (மு. நேசராசா, ஏழாலை தெற்கு), கொடுமைக்கும் கயமைக்கும் தயங்காத சண்டாளர்' (மு. செபஸ்தியாம்பிள்ளை, 19/4 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்), 'கொமிஷன் கறந்து தள்ளிவிடும் சதிக்கும்பல்' (இ. விநாயகலிங்கம், சுன்னாகம்), 'கொஞ்சமும் கருணையின்றி தட்டிப் பறிப்பதில் சமர்த்தர்' (செ. சூசையா, குருநகர்), 'கொம்மிஷனிலும் கள்ளிலும் தங்கியிருப்போர் சங்கம்' (செ. சற்குணதேவி, ஆனைக்கோட்டை).

### அடுத்த போட்டி

எட்டாவது போட்டிக்கு 'இலங்கை எழுத்தாளர் நண்பர்கள்' என்ற கற்பனைப் பெயரில் வரும் முதல் எழுத்துகளான இ. எ. ந. என்பவற்றிற்கு பொருத்தமான ஹாஷ்யமான ஒரு புதிய பெயரைக்கொடுங்கள்.

### நிபந்தனைகள்:

விடையைக் கீழ்க்காணப்படும் கூப்பனில் நிரப்பி, உங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாக அதில் எழுதி அனுப்புதல் வேண்டும். அனுப்பும் விலாசம் **முதலெழுத்துப் போட்டி (8) 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்.** விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். ஒருவர் எத்தனை விடைகளையாவது எழுதி அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையும் கூப்பனில் எழுதப்படவேண்டும். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது. எல்லா விஷயங்களிலும் போட்டிக்குழுவின் தீர்ப்பே முடிவானது. விடைகள் 17-6-69க்குமுன் எமக்கு வந்து சேரவேண்டும். மிகச் சிறந்த விடைக்குப் பரிசுப் பணமாக ரூபா 10-ம், இரண்டாவதுக்கு ரூபா 5-ம் வழங்கப்படும். வெற்றிபெறுபவர்களின் பெயரும் விலாசமும் முதலெழுத்துப்போட்டி (8) வெளியாகும்போது தெரிவிக்கப்படும்.

'ஈழநாடு'

முதலெழுத்துப் போடி -(8)

விடை: ..............................

..............................

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

சுமி- ருவிற்ஸ். இயக்குனர் சி. ஆனந்தராசா.

### பண்டத்தரிப்பு றெக்ஸ் குழு

ஸ்ரனி-பாட்டு, அழகராஜா-எக்கோடியன், எஸ். வின்சன்ட்-கிற்றூர், மணி-பொங்கோஸ், மனோகரன்-ஆல்ரவுன்ட்.

### அருணா இசைக்குழு

வி. பரமசிவம்-பாட்டு, அருணாசலம்-எக்கோடியன், ரங்கன்-கிற்றூர், இங்கிலீஸ்மென்ரலின், சண்முகரட்ணம்-தபேலா-கிடோல், பொங்கோஸ் - சிவானந்தம், டோல்கி, றம்ஸ் சுந்தரராஜன், மாணிக்கவாசகன் -ஆல்றவுண்ட்.

0 0 0

## பரிசுகள் வழங்கியோர் பட்டியல்

பத்தாண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெறும் பல்வேறு போட்டிகளுக்குப் பரிசில் வழங்கியோரது விபரங்கள்:-

யாழ்ப்பாணம் ஆர். வி. ஜி. பீடித்தொழிற்சாலை உரிமையாளர் திரு. வ. வ. இராமசாமிப்பிள்ளை - ஒரு தங்கப் பதக்கம்.

யாழ்ப்பாணம் சுன்னா திட்டி ஏ. கே. எஸ். நகை வியாபாரிகள்- ஒரு தங்கப் பதக்கம்.

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்- ஒரு தங்கப்பதக்கம்.

யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் ஸ்தாபனம்- ஒரு தங்கப்பதக்கம்.

யாழ்ப்பாணம் சுபாஸ் கபே உரிமையாளர்- ஒரு தங்கப்பதக்கம்.

யாழ்ப்பாணம் நொர்தன் இன்டஸ்றீஸ் ஸ்தாபனம்- ஒரு வெள்ளிக்கிண்ணம்.

யாழ்ப்பாணம் கன்னா திட்டி கே. என். மீருன் சாகிப் நகை வியாபாரிகள்- ஒரு வெள்ளிக்கிண்ணம்.

யாழ்ப்பாணம்கே. டி. எம். ஜுவல்லர்ஸ் நகை வியாபாரிகள்- ஒரு வெள்ளிக் கிண்ணம்.

யாழ்ப்பாணம் ராஜா தியேட்டர் உரிமையாளர் திரு. எஸ். தியாகராஜா- ஒரு வெள்ளிக்கிண்ணம்.

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி 'எம்மோ' சன்ஸ் ஸ்தாபனத்தார் - ஒரு வெள்ளிக் கிண்ணம்.

கட்டடக்கலை நிபுணரான கொழும்பு வி. ஸி. துரைராசா- ஒரு வெள்ளிக் கிண்ணம்.

கொழும்பு யாழ்ப்பாணம் சூரியா ஜுவல்லர்ஸ் நகை வியாபாரிகள்- ஒரு வெள்ளிக்கிண்ணம்.

அடுத்து இந்து மகளிர் கல்லூரி மாணவர்களின் 'ருக்குவின் கலியாணம்', தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் 'வன்ரெண்டர்' என்ற நாடகமும் இடம்பெறும். நிகழ்ச்சிகளின் இடைவேளையில் செல்வன் 'நித்தி' கனகரத்தினத்தின் வாத்தியஇசைநடைபெறும்.

இரவு 10-30 மணிமுதல் யாழ். கோட்டை வெளியில் வாணவிளையாட்டுகள்.

0 0 0

## வர்த்தகபவனியில் கலந்துகொள்வோர்

நாளை காலை 8 மணிக்கு 'ஈழநாடு' காரியாலய வாசலில் ஆரம்பமாகும் வர்த்தக அலங்காரப் பவனியில் கலந்துகொள்ளும் வாகனங்களின் பட்டியல்:

மில்க்வைற் சோப் ஸ்தாபனம்-இரண்டு வாகனங்கள்

நோர்தேன் இன்டஸ்றீஸ்- இரண்டு வாகனங்கள்.

ஒட்டோஸ் ஸ்தாபனம்- வாகனங்கள்.

சிலோன் டுபாக்கோ கம்பனி-ஒரு வாகனம்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்கம்-ஒரு வாகனம்.

வேலணை பிரபல வர்த்தகரான திரு. எம் எஸ். சிற்றம்பலம்-ஒரு வாகனம்.

அகில இலங்கை இளம் நடிகர் சங்கம்-வாத்தியக் குழுவுடன் ஒரு வாகனம்.

உடுப்பிட்டி பவானி நாட்டியாலயமும், மெல்லிசை மன்றமும் நாட்டியமாடும் மாணவிகளுடன் ஒரு வாகனம்.

கண்ணன் மெல்லிசைக் கோஷ்டி-ஒரு வாகனம்.

இரட்டையர் மெல்லிசைக் கோஷ்டி-ஒரு வாகனம்.

கலாலயா மெல்லிசைக் குழுவினர்-ஒரு வாகனம்.

சந்திரன் வாத்தியக் குழுவினர்-ஒரு வாகனம்.

யாழ்ப்பாணம், நாவலர் வீதி ஆ. ரகுநாதன்-ஒரு வாகனம்.

யாழ்ப்பாணம் ஏ. ஜி. ராஜசூரியர்-ஒரு வாகனம்.

செல்வம்ஸ் சவுண்ட் சேர்விஸ்-

இணுவில் அண்ணாகோப்பி -ஒரு வாகனம்.

ஆனைக்கோட்டை பி. வி. எம். ஒரேஞ்ச் பீடி கம்பனி- ஒரு வாகனம்

பண்டத்தரிப்பு 'றெக்ஸ்' வாத்தியக் குழு-ஒரு வாகனம்.

ஈழநல்லூர் அருணா இசைக் குழு-ஒரு வாகனம்.

0 0

## போட்டிப் பொறுப்பாளர்களும் மத்தியஸ்தர்களும்

நாளை திகதி காலை நடைபெறும் அலங்கார

சிலைகளின் அழகிய படத் தின் படத்தைத் திட்டியுள்

வர்த்தக விநோத உடைப் போட்டி அமைப்பாளரும் பிரதம அறிவிப்பாளரும்:- திரு. இ. மகாதேவா.

அலங்கார பவனி அறிவிப்பாளர்: திரு. எஸ் திருச்செல்வம். மரதன் ஓட்டப் போட்டி அறிவிப்பாளர்:- திரு. கே. வி. தனேஸ்வரன்.

அலங்கார வர்த்தக வாகனங்களின் மத்தியஸ்தர்கள்: டாக்டர். ரி. சண்முகநாதன் (யாழ். ஆஸ்பத்திரி வைத்திய சுப்பிரின்டன்) திரு. என். சபாரத்தினம் (யாழ். இந்துக் கல்லூரி அதிபர்) திரு. கே. தனபாலசிங்கம் (யாழ். இறைவரி உதவி ஆணையாளர்) வழக்கறிஞர் எம். ஆலாலசுந்தரம், திருமதி ஏ. ரி சுந்தரம்.

விநோத உடைப் போட்டி மத்தியஸ்தர்கள்: திரு. எஸ். பத்மநாதன் (யாழ் ஐக்கிய வியாபாரச் சங்க நிர்வாகச் செயலாளர்) திரு. க. பரராஜசிங்கம் (யாழ். மக்கள் வங்கி) திருமதி. பி. குகதாசன் (மாவட்ட உடற்பயிற்சிப் போதனாசிரியர்) திரு. குமாரகுலசிங்கம் (கோண்டாவில் இ. போ. ச. டிப்போ) செல்வி. பி. இராமநாதன் (யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை).

ஊர்வல பவனியை ஆரம்பித்துவைப்பவர்: திரு. ஆர். சுந்தரலிங்கம் (வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன்)

நாளை இரவு கலை நிகழ்ச்சிகள்: தலைவர்: டாக்டர் வி. ரி. பசுபதி. சொற்பொழிவாளர்கள்: திரு. ரி. முருகேசம்பிள்ளை (உதவி அரசாங்க அதிபர்) ஜனாப் எம். எம். ஏ குத்தூஸ் (ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர்), ஈழநாடு பேச்சுப் போட்டியில் தெரியப்படும் இரு மாணவர்கள். நன்றியுரை: திரு. ச. அம்பிகைபாகன்.

கலை நிகழ்ச்சிகள் இணைப்பாளர்: திரு. இ. மகாதேவா. உதவி: திரு. எஸ். திருச்செல்வம்.

போட்டிகளின் பொறுப்பாளர்கள்: உதைபந்தாட்டம்: திரு. என். பாலசுப்பிரமணியம் (யாழ். மாநகர சபை.)

கரபந்தாட்டம்: திரு. இ. குமரையா (யாழ். அரசாங்க செயலகம்)

கூடைப் பந்தாட்டம்: திரு. ஏ. பாலசிங்கம் (யாழ். மத்திய கல்லூரி)

வலைப்பந்தாட்டம்: திருமதி. பி. குகதாசன் (கல்வி இலாகா)

மரதன் ஓட்டம்: திரு. வி. ரி. கணேசலிங்கம் கனகரத்தினம் மகாவித்தியாலயம்).

உடற்பயிற்சிப் போட்டிகள்: திரு. ஆர். எஸ். சீவரத்தினம் (கல்வி இலாகா)

உயிர் வாழமுடியாமல் தவிப்பது பகிரங்க ரகசியம். இந்தப் பரிதாப நிலை மாற நாம் உருப்படியாக என்ன செய்யப்போகிறோம்?

யாழ்ப்பாண ரோட்டரி சங்கத்தின் புதிய தலைவராக முடிக்குரிய வழக்கறிஞரான கனகரத்தினம் பதவி ஏற்றூர்.

0 6 0

மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப், பொய்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித், தம்மையு நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச், செம்மையுள் நிற்பாராகிற் சிவகதி விளையு மன்றே

—அப்பர் அடிகள்

## சைவமும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள பாடசாலைகளுக்கு கட்டடநிதிதருமாறு கல்வி அமைச்சரைப் பலதடவைகள் கேட்டும் பயனளிக்கவில்லை என்றும் பிரதமருக்கு இது குறித்து எழுதியதன் பின்னரே கல்வி அமைச்சர் தம்மைஅழைத்து இப்பாடசாலைக்கு 25,000 ரூபாகட்டட நன்கொடைவழங்கினாரென்றும் கூறினார். 'இக்கிராமத்தின் குடிநீர்த்திட்டம்பற்றிநான் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் திரு. பிரேமதாசாவைப் பேட்டிகண்டேன். அவர் இந்நிதியாண்டில் விரைவில் வேலைகள் ஆரம்பமாகும் என வாக்குறுதியளித்திருக்கிறார்' என்றும் அவர்கூறினார்.

திருவாளர்கள்இராசையா, வே. வி. மூர்த்தி, திருமதி மங்கையர்க்கரசி, அ. வ. சுப்பிரமணியம், மு. கணபதிப்பிள்ளை, இ. நாகலிங்கம் ஆகியோரும் பேசினர்.

## உற்சவம்

பண்டத்தரிப்பு, புதன் பெரியவிளான், பண்டத்தரிப்பு, மாதகல், ஊறணி ஆகிய இடங்களில் அந்தோனியார் திருநாள் கொண்டாட்டத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திருநாள் மானிப்பாய்ப் பகுதியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவிருக்கிறது.

அரிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருமே கிறிஸ்தவர்களாகையால் இந்து சமயத்தைப் போதிப்பதற்கு ஆசிரியர் இல்லையெனப் பெற்றோர்கள் புகார் செய்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org